

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

ஸ்ரீ விளம்பி கார்த்திகை - மார்கழி
ஜனவரி - 2019

மலர் 8 இதழ் 1

## பொருளடக்கம்

கீதை பிறந்தது எதற்காக? 3
பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 5
பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

Vedantic Prayer 8

அனுக்கிரஹ பாஷணம் 9
பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மடத்துச் செய்திகள் 13

திருக்குறள் நூற்றெட்டு 16

இராமாவதாரம் எதற்காக 18

ஸத் ஸங்கரஹ விஷயம் 20

தமிழ் பாகவதம் 21

குர்வஷ்டகம் 23

வேத மந்த்ரார்த்தங்கள் 25

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ - 9 27

வால்மீகி பிரதீபம் - 47 28

தை மாத விசேஷ தினங்கள் 30

மஹா பெரியவாவின் திருவிளையாடல் 32

புராணக்கதை 34

வேதாந்த ஸாரம் 36

ஸபா ரஞ்ஜன சதகம் 38

பாராயண பக்கம் 40

ஆதிசங்கரர் அருளிய
த்ரிபுரஸுந்தரீ வேதபாதஸ்தவம் 42

பித்ரார்ஜிதம் 43

மகாபாரத சுருக்கம் 45

பாப புண்யங்கள் 47

भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.

நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்







ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்

வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# கீதை பிறந்தது எதற்காக?

## பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



கீதை பிறந்தது எதற்காக ? பகவான் கீதோபதேசம் செய்ததன் முக்கிய நோக்கம் என்ன? கீதையின் பரமதாத்பர்யம் என்ன? ஒருவன் ஓர் உபன்யாசம் செய்தாலும் ஒரு புஸ்தகம் எழுதினாலும் இடையிடையே அனேக விஷயங்கள் வரலாம். ஆனால் அவ்வுபன்யாசத்திற்கோ அப்புஸ்தகத்திற்கோ முக்கிய நோக்கம் ஒன்று இருக்க வேண்டும். ஒருவன் ஒரு கோவில் கட்டுகிறான். அக்கோவிலில் அனேக பாகங்களில் அனேகவிதமான மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. ஆனால் அது சிவன் கோவிலா? என்பதை அக்கோவிலில் ப்ராதான்யம் கொடுக்கப்பட்டிருக்கும் மூர்த்தியைக் கொண்டும் அக்கோவிலின் பரம்பரை அனுஷ்டானத்தைக் கொண்டும் நிர்ணயிக்கிறோம். அதேவிதமாகப் பகவத் கீதையில் கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், ஹட யோகம், சரணாகதி, மரண காலத்தில் பகவத் ஸ்மரணம், சன்யாச யோகம், ஞானம் வந்த பின்னும் லோக சங்க்ரஹத்திற்காகக் கர்மானுஷ்டான முறை முதலிய அனேக விஷயங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. இவைகளில் எதை முக்கியமாகக் கொண்டு கீதை உபதேசிக்கப்பட்டிருக்கிறது?

இவ்விஷயத்தில் புத்திமான்களும், மகான்களுமான அனேகர் வெவ்வேறு அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

“யுத்தம் செய்வதான கர்மயோகமே கீதையின் முக்கிய நோக்கம். மற்ற விஷயங்களெல்லாம் அதையனுசரித்துக் சொல்லப்பட்டன.” என்கிறார். பால கங்காதர திலகர், இவ்விஷயமாய், கீதா ரகஸ்யம் என்னும் நூலை எழுதியிருக்கிறார்.

பகவத் கீதை பகவானைச் சரணாகதி செய்யும் சாஸ்த்ரம் என்று சில வைஷ்ணவாசார்யர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். கீதையின் முக்கிய தாத்பர்யம் பக்தியோகத்திலேயே இருக்கிறது என்கிறார். சரணாகதிக்கும், பக்தியோகத்திற்கும் பிரியமான எல்லாப் பொருள்களிலும் எவ்வளவு ஆசையோ, அவ்வளவிற்கும் அதிகமாக நம்முயிருக்குயிராயிருக்கும் பரமாத்மாவிடத்தில் சதாகாலமும் இடைவிடாது நிலைநிற்கும் பேரன்பேயாகும். இவ்வித பக்தி ஏற்பட்டவன் வேறொன்றையும்

நினைக்க இடமில்லை. அவனது மனம் சதா பரமாத்மாவை நினைத்து, நினைத்து உருகிக் கொண்டே இருக்கும். மனதினுருக்கத்தால் எப்போதும் கண்ணில் கண்ணீர் ததும்பிக் கொண்டேயிருக்கும். தொண்டை தழதழக்கும். பகவானுடைய, சம்பந்தத்தைப் பெற்ற எப்பொருளைக் கண்டாலும் பகவானைக் கண்டது போல பித்தனைப் போல் அவன் கூத்தாடுவான். இந்நிலையே பக்தி நிலை. இது ஒரு க்ஷணநேரமிருந்தால் போதாது. இம்மன உருக்கம் உடலைவிட்டு உயிர் பிரியும் வரை இடையறாது நின்றாலேயே பக்தியின் பயனான மோக்ஷம் கிட்டுமென்பது பக்தி சாஸ்த்ரங்களில் கருத்து. சரணாகதி தத்வமோ இதைவிடச் சுலபமானது. "என்னை ரக்ஷிக்கும் பாரம் தங்களுடையது. எனக்கு வேறு கதியில்லை" என்று பகவானிடத்தில் விக்ஞாபனம் செய்து கொண்டு அவனுடைய சரணத்தில் நம்மைப் பரகதியடைவிக்கும். பாரத்தை ந்யாசம் செய்து ஒப்படைத்து விடுவதே சரணாகதி அல்லது பரந்யாசம் அல்லது ப்ரபத்தி என்று ரமானுஜ மதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ந - தர்ம நிஷ்டோஸ்மி - நசாத்மவே தீ
நபக்திமான் த்வச்சரணாரவிந்தே ।
அகிஞ்சனோ - அனன்யகதி ஶ்ஶரண்ய -
த்வத்பாத மூலம் - ஶரணம் - ப்ரபத்யே ॥

என்கிறார் ராமானுஜ பூர்வாசாரியராகிய யாமுனாசாரியார். இவ்வாக்கியத்தினால் தர்மானுஷ்டானம், ஆத்மக்ஞானம், பக்தியோகம், என்ற மூன்று வழிகளைக் காட்டிலும் சரணாகதி வேறுபட்டது என்பது தெரிகிறது. மது சூதன சரஸ்வதி என்ற ஒரு மகான் பகவத்கீதைக்குக் கூடார்த்த தீபிகை என்று ஓர் அரிய உரை எழுதியிருக்கிறார். இவர் அத்வைத சித்தி என்னும், பெரு நூலை இயற்றியிருக்கிறார். இவர் சரணாகதியைப் பற்றிச் சொல்லும் போது சரணாகதி மூவகைப்பட்டதென்கிறார்.

தஸ்யைவாஹம் - மமைவாஸெள
ஸஏவாஹம் - இதி - த்ரிதா ।
பகவத் ஶரண த்வம் ஸ்யாத் -
ஸாதனாப்யாஸ பாகவத: ॥

சரணகாதி தத்வமானது அதை யனுசரிப்பவர்களின் மனதில் பக்குவத்தின் பேதத்தினால் மூன்று வகைப்படும். ஆரம்ப ததையில் நான் அவனைச் சேர்ந்தவன் என்ற பாவம் ஏற்படும். இந்த பாவம் வளர வளர அவன் என்னைச் சேர்ந்தவன் என்னும் பார்வம் ஏற்படும். இந்த இரண்டாவது பாவமும் நாளடைவில் வளர்ந்து முடிவில் அவனே தான் நான் என்னும் பாவம் வந்து விடும்.

# நீதிக் கதைகள்

## பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## இதிகாச சகோதரர்கள்

குழந்தைகள் முதல் பெரியோர் வரை, எல்லோரும் நல்ல நட்போடு இருக்க வேண்டும். அதற்கு உதாரணமாக ராம லட்சுமணர்களைச் சொல்லுவார்கள். அவர்களுடைய ஒற்றுமையை யாராலும் பிரிக்க முடியாது. சீதை தனியாகப் பிரிந்தாள். ஆனால் லட்சுமணன் ஒருநாள் கூட அவரை விட்டுப் பிரியாமல் இருந்தால். அப்படி உள்ளமும், உடலும் போல இருப்பதே நல்ல ஒரு சிநேகத்துக்கு அடையாளம். அடுப்பிலே ஒரு பாத்திரம் வைத்து அதிலே பாலைக் காய்ச்சுகிறார்கள். அந்தப் பாலைக் காய்ச்சுவதற்கு முன்பாக ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொரு பாத்திரத்திலே ஊற்றுவார்கள். அப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் தங்கி அதிலேயே ஈரப்பசை இருக்கும். அந்த ஈரப்பசை அகன்ற பிற்பாடு நன்றாக ஆனபிறகுதான், பாலை அருந்த வேண்டும் என்பதற்காகத்தான் பாலைச் சூடு செய்கிறார்கள். அப்படி நன்றாகச் சூடு செய்த பிற்பாடு நன்றாக கொதிக்கும்.



அப்பபடிப் பொங்கும் போது கவனிக்காமல் விட்டால் அது வழிந்து நெருப்பிலே விழுந்து விடும். அப்போது ஒரு வாசனை வரும். இது நம் வீட்டிலே காணக்கூடிய ஒரு நிகழ்ச்சி. தன்னோடு நட்பாக இருந்தவன் ஜலம். நெருப்பிலே எரிக்க எரிக்க, ஜலம் சுண்டிப் போய் ஜலமே இல்லாத நிலை ஆகி விடுகிறது. அப்பொழுது தன் நண்பனைக் காணேமே அவன் எங்கே சென்று விட்டான் என்று பால் யோசிக்கிறது. நெருப்பிலே போய் விட்டான் என்று தெரிந்து கொள்கிறது. பிறகு இதற்கும் தாபம் தாங்கவில்லை. இதுவும் பொங்கிப், பொங்கி தன் நண்பன் போன இடத்திற்கே தானும் போய்விட வேண்டும் என்று நெருப்பிலே விழுந்து விடுகிறது என்பது ஒரு நியதி. இப்படி ஒரு நட்பு ஆபத்துக் காலத்திலும்கூட, கஷ்ட காலத்திலும்கூட துன்புறும் காலத்திலும் கூட யார் கூட இருந்து உதவி செய்கிறானோ, அவன் தான் உண்மையான நண்பன் என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த உதாரணம் சொல்லப்படுகிறது.

ராமானும், லக்ஷ்மணனும் இணைபிரியாத சகோதரர்கள். எவ்வளவோ கஷ்ட நஷ்டகங்களெல்லாம் ராமருடைய வாழ்க்கையிலே, பதினான்கு ஆண்டுகளிலேயும் மற்றும் ராஜ்ய பரிபாலனம் செய்ய வந்த பிறகும் கூட ஏற்பட்டன. எல்லாவற்றிற்கும், உறுதுணையாக நின்று அத்தனையையும் சமாளிக்க வைத்து ராமபிரானோடு அந்தச் சுக துக்கங்களைப் பங்கிட்டு கொண்டு - ஒன்றாக வாழ்ந்தவன் லக்ஷ்மணன். ஆகவே நட்பு எப்படி இருக்க வேண்டும் என்றால் ராம, லக்ஷ்மணர்கள் போல் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். அதே போலத் தான் பரதனும், சத்ருக்னனும்

அடுத்தபடியாக வாலி சுக்ரீவன் என்று இரண்டு பேர் ராமாயணத்திலே வருகிறார்கள். அவ்விருவர்களும் ஒரு தாய் மக்கள். ஆனால் அவர்களுக்குள் அபிப்ராய பேதம் மாத்திரம் அல்ல. எண்ணங்கள் மாத்திரம் மாறுதலான எண்ணங்கள் அல்ல, செய்கையிலும் மாறுதலான செய்கைகள் வந்து அதன்மூலம் ஒருவருக்கொருவர் விரோகியாக ஆகி, வெவ்வேறு இடத்திலே வசிக்கிறார்கள். ராமனுடைய நட்பு, சுக்ரீவனுக்குக் கிடைத்த பிற்பாடு வாலியைக் கொல்வதற்கே கூட ராமனுடைய துணையைக் கொண்ட சுக்ரீவன் துணிகிறான். சகோதரர்களிலே எப்படி இருந்தால்கள் ராம லட்சுமணர்கள். மற்றொரு சகோதரரிலே வாலி சுக்ரீவன் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஆகவே வாலி சுக்ரீவன் போல் ஒரு பொழுதும் நம்முடைய நட்பு, சகோதரத்துவம் இருக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு.

நல்லதற்கு எடுத்துக்காட்டு. ராம லட்சுமணர்கள் போல்; இப்படி இருக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு வாலி, சுக்ரீவன் கடவுளைக் கூடத் துணையாக வைத்துக் கொண்டு வாலியைக் கொல்ல வேண்டிய வேலையை சுக்ரீவன் செய்தான் என்றால் அப்படிப்பட்ட தீய நட்பெல்லாம் நமக்குக் இருக்கக் கூடாது என்பதை நினைவூட்டுகிறது. நல்லதைச் செய்ய வேண்டும்; தீயதைச் செய்யக் கூடாது. தர்மம் சர. அதர்மம் மா சர! என்பது நீதி வாக்கியங்கள். நல்லது செய்ய வேண்டும் என்பதற்க ராம லட்சுமணர்கள் வாழ்க்கை உதாரணம். தீயதைச் செய்யக் கூடாது என்பதற்கு வாலி சுக்ரீவர்களுடைய வாழ்க்கை உதாரணம்.

மூன்றாவதாக ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என்று மூன்று சகோதரர்கள். ஒரு தாயின் மகன்கள். அந்த மூன்று பேர்களுக்கும், பிறவியிலிருந்தே மூன்று கணங்கள், மூன்று சுபாவங்கள், மூன்று நிலைகள், மூன்று செயல்கள், ரஜோ குணத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிறந்தவன் ராவணன். தமோ குணத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு பிறந்தவன் கும்பகர்ணன். சத்வ குணத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்தவன் விபீஷணன். ஆகவே,

பிறப்பிலிருந்தே அவர்களின் குணங்களிலிருந்து எல்லாமே மாறிப் போகிறது. ஒரு தாயின் குழந்தையாக இருந்தாலும்! ராவணன் மகா சிவ வேதம் சொல்லி, பரமேஸ்வரனையே சந்தோஷப்படுத்திக் கைலாய மலையிலேயே அவரை ஆனந்தப்படுத்தியவன். அவ்வளவு நல்ல பக்தனாக இருந்தாலும் கூட, ரிஷிகளையெல்லாம் இம்மைசப்படுத்தி ஆட்டுவித்தான். இவனுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு தான் கொடுக்க வேண்டும். வாயு பகவான் எவ்வளவு காற்று தர வேண்டுமோ அவ்வளவு தான் தர வேண்டும். சூரியன் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தான் வெப்பம் கொடுக்க வேண்டும். சந்திரன் எவ்வளவு ஒளி கொடுக்க வேண்டுமோ அவ்வளவு தான் கொடுக்க வேண்டும். மழை எவ்வளவு பொழிய வேண்டுமோ அவ்வளவு தான் பொழிய வேண்டும். இப்படி ஒவ்வொரு கிரகத்தையும், பஞ்ச பூதங்களையும் தன் வசத்தில் ஆட்டி வைத்து, பூலோகம் முழுவதையும், தேவலோகம், முழுவதையும் தன் வசமாக ஆக்கிக் கொண்டான். இவ்வளவு பக்தனாக இருந்தும் கூட அப்படியெல்லாம் செய்தான். காரணம் ரஜோ குணப் பிரதானம். கடைசியாக சாக்ஷாத் மகாலக்ஷ்மி ஸ்வரூபமான ராமபிரானுடைய சீதையையும்கூட அபகரித்துச் சென்றான் என்கிறது ராமாயணம். ஆகவே, இப்படிப்பட்ட தீய குணத்தோடு மிருகமாயும் இருக்கக் கூடாது. எவ்வளவு பக்தி இருந்தாலும் அது ஒரு பக்கம்; நீதி, நல்ல மனோபாவம், போன்றவைகள் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தால் ராவணன் நிலைதான் நமக்கு வரும் என்பதற்கு எடுத்துக்காட்டு. ராவணனுடைய வாழ்க்கைச் சரித்திரம். பக்தியிலே குறைவு கிடையாது ராவணனுக்கு. அவன் யாகம் செய்யும் போது தன்னுடைய உடம்பெல்லாம் அறுத்தெடுத்துப் போட்டான். நன்றாக வரம் பெற்ற பிற்பாடு சிவபெருமானை பூஜை செய்தான். வழிபாடு செய்தான். பக்தியிலே குறைவில்லை என்றாலும் உள்ளத்திலே குறைவு ஏற்பட்டு விட்டது. நல்ல குணத்திலே குறைவு ஏற்பட்டு விட்டது. ஆனால் அந்த பக்தி பரிமளிக்காமல் போய் அவனுடைய கெட்ட சுபாவம் மட்டு'தான் பிரசித்தி பெற்றது. ராவணன் என்றாலே கெட்ட சுபாவம் கொண்ட ஒரு ராட்சஸன் என்றுதான் நினைவுக்கு வருகிறதே தவிர, நல்ல சிவ பக்தன், வேதத்தை நன்கு கற்றறிந்தவன், நல்ல உயர்ந்த குலத்தில் உதித்தவன் என்பதெல்லாம் மறந்தே போய்விடுகிறது. ஏன்? அவனுடைய குணம் அப்படி மாற்றிவிட்டது அவனை ஆகவே, அது போன்ற தீய குணம் நம்மிடையே இருக்கக் கூடாது இதற்கு ராவணன் ஒரு உதாரணம்.

(தொடரும்)

# VEDANTIC PRAYER

## SRUTIGITA

त्वदवगमी न वेत्ति भवदुत्त्हशुभशुभयो
र्गुणविगुणान्वयांस्र्ताहं न देहभृतां च गिरः ।
अनुयुगमन्वहं सगुण गीतपरम्परया
श्रवणभृतो यतस्त्वम पवर्गागतिर्मनुजैः ।। २८

(हे) स्गुण O Lord who is endowed with innumerable divine atttributes त्वदवगमी he who has realized You भवदुत्त्हशुभाशुमयोः both good and bad which happen (only) by Your will गुणविगुणान्वयान् experiences which produce pleasure and pain (lit. the union of agreeable and disagreeable things) न वेत्ति do not cognize ताह then देहभृतां of men गिरः च words also (न वेत्ति do not care for) यत because ग्रनुयुगं from age of age गीतपर परया spiritual advice (lit. songs, since the Vedas are chanted and sung) come down in succession from eminent masters मनुजैः by aspirants (lit. men) ग्रन्वहं repeatedly (lit. daily) श्रवणमृनः acquired त्वं You तेषां to them ग्रपवर्ग गतिः the goal, which is the final emancipation (भवसि become)


28. *tvad- avagami na vetti bhavad-uttha*
*subhasubhayor*
*guna-vigunanvayamstarhi deha*
*bhrtam ca girah*
*anuyugam anvaham saguna gita*
*paramparaya*
*sravanabhrto yatastvam apavarga*
*gatir manujaih*

O Lord, of the infinite qualities! those who have known You never come under the sway of the three gunas, either as good or as evil. Nor are they affected by by the words of those who have not realized You.

To those sages who have treasured the meaning and spirit of the Upanisads in their hearts by repeated reflection and a long life wedded to spiritual pursuits. You are the supreme Goal the only achievement of life.

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



ஓம்கார பஞ்சர ஷுகிம் உபநிஷத்
உத்தியானகேலி கலகந்திம்

ஆகம விப்னியா மயூரி மரிஅமந்தர் விபாவயே
கௌரிம்

அனைவரையும் ஆகர்ஷணம் செய்து, அனைவருக்கும் அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கக் கூடிய இந்த சங்கீத சாஸ்திரத்தை, சாம வேதத்தின் மூலமாகவும், உபவேதமான காந்தர்வ வேதத்தின் மூலமாகவும், நம்முடைய தேசத்திலே, இந்த சங்கீதத்தை காப்பாற்றி வருகிறார்கள். சங்கீதம் என்பது ஒரு சாஸ்திரம். சமயத்தை, ஸ்வரத்தை, மாற்றாக் காலத்தை சரியான விதத்திலே உபயோகப்படுத்துவதின் மூலமாக வேதத்திற்கு ஆரோக்கியமும், ஏகாக்க்ரிதா concentration என்று நாம் எதைச் சொல்லுகிறோமோ, அந்த ஏகாக்கிருதத்தை அளிக்கக்கூடியது இந்த சங்கீதம்.

பல்வேறு காரணங்களாலே, மந்திரி வெங்கைய நாயுடு சொன்னது போன்று, மத்திய காலத்திலே, பல்வேறு காரணத்தினாலே, நம்முடைய கலாசாரத்தை நாம் பூரணமாக தெரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையிலே, நம்முடைய சங்கீதத்தை இந்த மும்மூர்த்திகள் ஷ்யாமா சாஸ்திரிகள், முத்து ஸ்வாமி தீட்சிதர், தியாகப்பிரம்மம் இவர்கள் அனைவரும் சேர்ந்து, இந்த சங்கீதத்தை நல்ல முறையிலே காப்பாற்றி, அதை இன்றைக்கு, மார்கழி மாதத்திலே, திருப்பாவை, திருவெம்பாவை உற்சவத்தோடு இந்த சென்னை மாநகரத்திலே அநேக சபைகளிலே, சங்கீத பிரம்மோற்சவத்தை பார்க்க முடிகிறது.

நம்முடைய தேசத்திலே விஞ்ஞானம் வளர வேண்டும். விஞ்ஞை வளர வேண்டும். ஜனங்களுக்கு தேவையான பல்வேறு சௌகரியங்கள் வளர வேண்டும். அதே

சமயத்திலே, மனசிற்கு சாந்தியையும், தெளிவையும்,ஸ்பச்டதா,கிளாரிட்டி கொடுக்கக் கூடிய இந்த பக்தி மார்க்கம், சங்கீதம், சதுஷஸ்டி கலா என்று பெயர், அறுபத்தி நான்கு கலைகளும், வளர்ந்து, அதன் மூலம் ஒரு உயர்ந்த பாரதம், வியாச பாரதம் அமைய வேண்டும்.

வியாச பாரதம் என்பதை இவர் சொன்னாரே, பிரகிருதி, விக்ருதி-என்பதற்கான விளக்கத்தை. கொடுப்பது -தானம், தர்மம் என்பது ஸ்வபாவம். விக்ருதி என்றால், அதற்கு விரோதமானது. பிறருடைய பொருளுக்கு ஆசைப்படுவது. கொடுக்க வேண்டும் என்பது ஸ்வபாவமாக. பக்தி செய்ய வேண்டும் என்பது ஸ்வபாவம். பெரியவர்களை மதிக்க வேண்டும் என்பது பாரதியர்களின் ஸ்வபாவம். குழந்தைகளை பார்த்துக் கொள்ளுவது என்பது, பாரதியர்களின் ஸ்வபாவம். இது போன்ற நல்ல ஸ்வபாவங்கள், ஆத்ம குணங்கள் எல்லாம் ஏற்பட்டு, பாட புத்தகங்களில் இவர்களுடைய சரித்திரங்களை எல்லாம் சேர்க்க வேண்டும் என்று சொன்னால்; நாம் எங்கிருந்து வந்து இருக்கிறோம், நாம் எந்த உயர்ந்த பாரம்பரியத்தை சார்ந்தவர்கள் நாம் என்று தெரிந்து கொண்டால் தான், நாம் நல்லதை செய்வதற்கு ஓரளவாது முயற்சிப்போம்.

ஆகவே, இந்த நல்ல விஷயங்களை பாரத தேசத்திலே பிரசாரம் செய்து; பெரியவர்கள் சரஸ்வதி அம்மனுக்கு காசியிலே கோவில் கட்டி இருக்கிறார்கள். சம்பூர்ணானந்தா விஷ்வ வித்யாலயாவிலே, காசி ராஜா அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி சரஸ்வதி வாக்தேவி மந்திர் கட்டி இருக்கிறார்கள். ஜம்மு ஸ்ரீநகர் மத்தியிலே, ராம்பாக் என்ற இடத்திலே, சரஸ்வதி அம்மனுக்கு கோவில் கட்டி இருக்கிறார்கள். வருஷம், வருஷத்திலே, சுமார் நூறு நாட்களாவது, சங்கீதக் காரியகிரமன்களை நடத்தி, சங்கீத வித்வான்களுக்கு சன்மானமும், பிரசாதமும் அளித்து வருகிறார்கள். அவருக்கு சங்கீதத்தின் மீது இருக்கக் கூடிய அபிமானத்தின் காரணமாகவும், சங்கீதம் என்பது நம்முடைய தேசத்திலே நல்ல சந்தேசத்தை, message என்று சொல்லுகிறார்களே, நல்ல சந்தேசத்தை, நல்ல செய்திகளை கொடுக்கக் கூடிய இந்த சங்கீதத்தை அனைவரும் மேன்மேலும் வளர்க்க வேண்டும். வளர்வதன் மூலமாக அனைவரும் வளர முடியும். சங்கீத மும்மூர்த்திகளின் விழா இங்கு நடை பெறுகிறது.

தற்பொழுது வடநாட்டிலேயும், இந்த கர்நாடக சங்கீதத்தை பிரசாரம் செய்ய வேண்டும் என்பதற்காக, காசியிலே, முத்துஸ்வாமி தீட்சிதர் கிருதிகளின் காரிக்க்ரமம்

அவ்வப்பொழுது நடைபெறுகிறது. தொடர்ந்து பல்வேறு இடங்களிலேயும் ஹரித்வார், காமாக்கி இது போன்ற பல இடத்திலேயும், ஹிந்தி பேசக்கூடிய மக்களின் மத்தியிலே, சம்ஸ்கிருத கீர்த்தனங்களை பிரசாரம் செய்து, அவர்களும் இந்த கர்நாடக சங்கீதத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொண்டு, இந்த கர்நாடக சாஸ்திரிய சங்கீதமானது இந்தியா முழுவதும் பரவுவதற்கு, அதன் மூலம் மேன்மேலும் பக்தி மார்க்கம் பரவுதற்கு; மேன்மேலும் தென்னாட்டில் நல்ல விஷயங்கள் நிறைய இருக்கின்றன. வேதங்கள் இருக்கின்றன, உபநிஷத்கள் இருக்கின்றன. பல்வேறு கலைகள் இருக்கின்றன தென்னாட்டிலே. இந்தியாவிலே எப்படியெல்லாம் பரப்ப முடியுமோ பரப்பி, இந்த திருவாரூர்-ஜனனாத் கமலாலையே, ஸ்மரநாத் அருணாசலம் என்று சொல்வார்கள் திருவண்ணாமலையிலே -நினைத்துக் கொண்டாலே முக்தி, பிறந்தாலே முக்தி தரக்கூடிய இந்த திருவாரூரிலே இந்த மும்மூர்த்திகளுடைய ஜனனம் அமைந்து இருக்கிறது. அந்த ஊரிலே, அந்த வீட்டிலே பாரம்பரியமாக-வெளிநாட்டிலே ஏதாவது நூறு வருஷம் அல்லது இருநூறு வருஷ வீடு இருந்தாலோ, ஏதாவது monument இருந்தால், அவர்கள் அதை கௌரவிக்கும் விதமே தனியாக இருக்கிறது. நாம் அதற்காக, வெளிநாட்டிலிருந்து அனைத்தையும் காப்பி செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை, அர்த்தமில்லை. நாம் நம்முடைய பெருமைகளை தக்க வைத்துக் கொள்ளவேண்டும் முதலிலே. பாட்டுகளை கற்றுக் கொள்வது மூலமாக, பாடல்களை ஊக்குவிப்பதின் மூலமாக, நாம் கலைகளை காப்பாற்ற வேண்டும். அந்த சங்கீதத்தை நமக்கு சம்ரக்ஷணம் செய்து, இந்த தலைமுறைகளுக்கு எல்லாம் அளித்த அவர்களை கௌரவித்து, அந்த வீடுகளையெல்லாம், clevland பெரிய ஊர்களில் எல்லாம் சங்கீத உற்சவம் நிறைய செய்கிறார்கள். இங்கு இருக்கக் கூடிய, வெளிநாட்டில் இருப்பவர்கள், இங்கு இருக்கக் கூடிய இளைஞர்கள் அனைவரையும் அந்த வீடுகளை எல்லாம் பார்க்கச் செய்து, அதையெல்லாம் பார்த்து, அந்தப் பழமையை மாறாமல் காப்பாற்றி-சங்கீதத்தையும் காப்பாற்ற வேண்டும், அவர்களுடைய வீடுகளையும் நன்றாகக் காப்பாற்றி, இது போன்ற நல்ல விழாக்கள் நடைபெற வேண்டும். வெங்கையா நாயுடு அவர்கள் காஞ்சிபுரத்தின் மேம்பாட்டிற்காக, மத்திய அரசாங்கத்தின் மூலமாக, பல முன்னேற்றங்களை எடுத்துக் கொண்டு, யாத்திரிகள் தங்குவதற்கு உள்ளூர் வசதிகள் செய்வதற்கு முயற்சியெல்லாம் செய்து இருக்கிறார். மேன்மேலும், இது போன்று நல்ல பணிகளிலே ஈடுபட்டு, காஞ்சிபுரத்தின் முன்னேற்றத்திற்க்காக. வரக்கூடிய யாத்திர்களுக்கு, ஹரித்வாரில் ஆயிரம் ரூம் இருக்கிறது. ரிஷிகேஷில் நிறைய ரூம் இருக்கிறது. திருப்பதி சென்றால்

நிறைய ரூம் இருக்கிறது. அந்தக் காலாத்தில், ராமேஸ்வரத்திலிருந்து காசி செல்வதற்கு சத்திரம் கட்டினார்கள். இன்றைக்கு ஒரு புது சத்திரம் கட்ட வேண்டிய அவசியம் இருப்பதனாலே, இது போன்ற ஒரு மண்டபங்கள், வசதிகள் செய்வதற்காக, அந்த பிரயர்தனங்கள் எல்லாம் செய்து, காமாக்ஷி கோவில்களை சுற்றி சில வசதிகள் எல்லாம் செய்வதற்கு வேலைகள் ஆரம்பித்து இருக்கிறார்கள். இது போன்று கிராமப்புற அபிவ்ருத்தி, பழைய நகரங்களான காஞ்சிபுரம் போன்ற நகரங்கள், இது புதிய நகரம் சென்னை. நகரேஷு காஞ்சி -காஞ்சிபுரம். இது போன்ற நகரங்களையும் புனரமைத்து, ஜனங்களுக்கு வசதிகள் செய்து, வசுதெய்வ குடும்பகம்-அந்த ஸ்லோகத்தை சொன்னாரே-நேபாள எல்லையிலே பெரியவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

सर्वे भवन्तु सुखिनः *சர்வே பவந்து சுகினஹா:*

सर्वे सन्तु निरामया *சர்வே சந்து நிராமயா:*

सर्वे भद्राणि पश्यन्तु *சர்வே பத்ராணி பஷ்யந்து*

मा कशिचददुः खभाग्भवेत् *மா கச்சித் துக்கபாவேத்*

என்கிற நம்முடைய தர்மத்தின் சந்தேசத்தை-அனைவரும் சுகமாக இருக்க வேண்டும். லோகா சமஸ்தா ஸுகினோ பவந்து - அந்த சுகத்தை. சாந்தியை தினமும் பெறுவதற்காக, அன்னமாச்சார்யா கீர்த்தனை தினமும் பதினைந்து நிமிஷம் கேட்டுக்கொண்டு இருக்கார்கள். இந்த சங்கீதத்தை மென்மேலும் வளர்த்து, வாத்தியங்களாக இருக்கட்டும், நாதஸ்வரங்களாக இருக்கட்டும், பாட்டாக இருக்கட்டும், சங்கீத சாஸ்திரத்தை மேன்மேலும் வளர்த்து, அதன் மூலம் பக்தியை வளர்த்து, நல்ல நாகரீகத்தை, civilisation, நல்ல கௌரவமான நாகரீகத்தை வளர்ப்பதற்கு அனைவரும் மென்மேலும் முயற்சி எடுத்து செய்ய வேண்டும்.

ஹர ஹர நமப் பார்வதி பதயே, ஹர ஹர மகா தேவா

# ஸ்ரீ மடத்துச் செய்திகள்

## திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம்



அருள்மிகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் டிசம்பர் மாதம் 12ம் தேதி ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் முன்னிலையில் வெகு விமரிசையாக நடந்தேறியது.



கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் டிசம்பர் மாதம் 2ம் தேதி காஞ்சிபுரத்திலிருந்து யாத்திரை புறப்பட்டு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அவதார ஸ்தலமான விழுப்புரத்திற்கு 3 நாட்கள் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஷ்வர ஸ்வாமி பூஜையுடன் விஜயம் செய்து அங்கிருந்து புறப்பட்டு டிசம்பர் மாதம் 5ம் தேதி மாலை 6:30 மணியளவில் திருவானைக்காவல் வருகை புரிந்தார்கள். அவர்களுக்கு திருவானைக்கவல் நகரவாசிகளின் சார்பாக வேத கோஷம், மங்கள வாத்யத்துடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குள்ள நமது சங்கர மடத்தில் (ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் பூர்வாஸ்ரமத்தில் வேதம் பயின்ற இடம்) ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்த்ரமௌளீஷ்வர ஸ்வாமி பூஜையுடன் 6 நாட்கள் தங்கியிருந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.



டிசம்பர் மாதம் 9ம் தேதி மேற்படி கோவிலின் பரிவார தேவதைகளின் சன்னிதிகளுக்கு ஆசார்ய ஸ்வாமிகளின் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்வாமி, அம்பாள் சன்னிதிகள் மற்றும் ராஜ கோபுரங்களுக்கு டிசம்பர் மாதம் 12ம் தேதி காலை 6:30 மணியளவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக அதற்கான யாகசாலை துவக்கம் மற்றும் யாகசாலை பூஜைகளுக்கு ஆசார்ய ஸ்வாமிகள் விஜயம் செய்து அனுக்ரஹித்தார்கள்.



கும்பாபிஷேக தினத்தன்று காலை ஸ்ரீ மடத்தில் கோ பூஜை நடத்தப்பட்டு பசு மற்றும் கன்றோடு , கௌரி காளை, மங்கள வாத்யங்களுடன் ஊர்வலமாக புறப்பட்டு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் முதலில் ஸ்ரீ ஜம்புகேஷ்வரர் சன்னிதியின் கோபுரத்திற்க்கு வந்தடைந்தார்கள். யாகசாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட கலசத்தினால் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திருக்கரத்தினால் ஸ்ரீ ஜம்புகேஷ்வரர் கோபுரத்திற்க்கு கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். பிறகு ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அம்பாள் கோபுரத்திற்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் கும்பாபிஷேகம் செய்வித்து அங்கிருந்து அம்பாள் சன்னிதிக்கு சென்று அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாரதனை செய்வித்தார்கள். கும்பாபிஷேக நிகழ்வில் அனைத்து ஆதீனகர்த்தர்கள், மடாதிபதிகள், தமிழக ஆளுநர் ஸ்ரீ பன்வாரிலால் புரோஹித் மற்றும் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். பொது மக்களும் பெருந்திரளாக கலந்துகொண்டு கும்பாபிஷேக நிகழ்வை கண்டு களித்தனர். கும்பாபிஷேத்தை முன்னிட்டு அனைவருக்கும் அன்னதானம் சிறப்பாக அளிக்கப்பட்டது.





கும்பாபிஷேக நிகழ்வையொட்டி ஒரு சிறப்பு தபால்தலை வெளியீடு திருவானைக்காவல் ஸ்ரீமடத்தில் நடைபெற்றது. ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வெளியிட தமிழக ஆளுநர் ஸ்ரீ பன்வாரிலால் புரோஹித் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

கும்பாபிஷேகத்தை முடித்துக்கொண்டு அன்று மாலை ஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி ஸ்வாமிகளின் அவதார ஸ்தலமான இருள்நீக்கி க்ராமத்திற்க்கு ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பூஜையுடன் விஜயம் செய்தார்கள். 13ம் தேதி அங்கு ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஷ்வர ஸ்வாமி பூஜை செய்து க்ராம மக்களுக்கு தர்சனம் அளித்தார்கள். கஜா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஸ்ரீமடம் மூலம் நிவாரணம் அளிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. பின்னர் அங்கிருந்து புறப்பட்டு கும்பகோணம் அருகே உள்ள திருக்கோடிகாவல் க்ராமத்திற்க்கு விஜயம் செய்து இரண்டு நாட்கள் அங்கு பூஜை செய்தார்கள். அங்கிருந்து காஞ்சிபுரம் திரும்பும் வழியில் அச்சிறுப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ பாலவேத பாடசாலையில் ஒரு நாள் தங்கி ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஷ்வர ஸ்வாமி பூஜை நடத்தினார்கள். பின்னர் 16ம் தேதி இரவு யாத்திரையை முடித்துக்கொண்டு காஞ்சிபுரம் திரும்பினார்கள். காஞ்சிபுரம் எல்லையில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில், ஸ்ரீ ஏகாம்ப்ரேஸ்வரர் கோவில் மற்றும் ஸ்ரீ வரதராஜர் கோவில் ப்ரசாதங்கள் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கு வழங்கப்பட்டது.

## கலை(ந்த)ச்சொல் டிசம்பர் விடைகள்

1. மகா கவி காளிதாஸர்
2. பரோபகாராய புண்யாய
3. திருவள்ளுவ மாலை
4. ஆருத்ரா தர்சனம்
5. வேதாந்த தேசிகர்

## கலை(ந்த)ச் சொல் ஜனவரி வினாக்கள்

1. தா பனாஜம்தருரை
2. மவிசூவேடாகணி
3. ரதிபுருஹராயஸ்ம்
4. சிமுசதா ந் யனைத
5. ஆரைஉசியர்கரிள்



# திருக்குறள் நூற்றெட்டு

ப்ரதீபப் பேழை

திருக்குறளிலிருந்து தொகுக்கப்பட்டது.
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அனுக்ரஹித்த திவ்ய ஸ்ரீமுகத்துடன் கூடியது.

“£

## 69. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
## செம்பொருள் காண்ப தறிவு

*பிறப்பு என்னும் பேதைமை = பிறப்பிற்குக் காரணமாகிய அவித்யை, நீங்க சிறப்பு = வீடு, என்னும் = என்று சொல்லப்படும். செம்பொருள் = ஸ்வயம் ஜோதியாகிய கடவுளை, காண்பது = அபரோக்ஷமாகப் பார்த்தல், அறிவு = ஞானம் ஆகும்.*

*இக்குறள் நிதித்யாஸனமென்னும் ஏகாக்ர த்யானத்தைக் கூறுகின்றது. பேதைமையே பிறப்பிற்குக் காரணமென்பது அத்வைத வேதாந்தத்தின் கொள்கை. “க்ஞானேன - து - தத்- அக்ஞானம் யேஷாம் - காஸிதம் - ஆத்மன; தேஷாம் - க்ஞானம் ப்ரகாஸயதி தத்பாம்” (கீதை 5-16) என்பது பகவத் கீதை.*

## 70. இன்ப மிடையறா தீண்டு மவாவென்னும்
## துன்பத்துட் டுன்பங் கெடின்

*அவா = பேராசை என்னும் துன்பத்துட் துன்பம் = பெருந்துன்பதைக் கொடுக்கும் பொருள், கெடின் = அழிந்து போனால், இடையறாது = இடைவிடாமல், ஈண்டும் = இவ்வுலகத்தின் கண்ணும், இன்பம் = பேரின்பம் வரும்.*

*ஆசையறுபட்டால் இந்த ஜன்மத்திலேயே, அதாவது சாவதற்கு முன்னமேயே மோக்ஷங்கிடைக்கும் என்பது கீதை (5-23) யின் உபதேசம்.*

## 71. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
## பேரா வியற்கை தரும்

*ஆராவியற்கையவா = நிரம்பாத் தன்மையுடைய அவா, நீப்பின் = நீங்கின் (அது) அந்நிலையே = அந்த நிலையின் கணனே, பேராவியற்கை = நித்தியமான வீட்டினை, தரும் = கொண்டு வரும்.*

*"எப்பொழுது எம்மனிதனுக்கு எல்லா காமங்களும் நீங்குகின்றனவோ, அப்போதே அவன் ஈண்டு பிரம்மமாகிறான்." 2-3-147 என கடோபனிஷத்தும் எவன் காமமற்று பிரம்மத்தில் ஈடுபடுகின்றானோ அவன் பிராணன் வெளிக்கிளம்புவதில்லை. பிரம்மமாக இருந்து பிரம்மமாகவே ஆகிறான் (4-4-6) என ப்ருஹதாரண்ய கோபனிஷத்தும், எவன் ஒன்றையும் விரும்பாமலும், வெறுக்காமலும் இருக்கின்றானே அவன் இவ்வுலகிலேயே பிரம்மாக ஆகின்றான் என்னும் மகாபாரதம் அசுவமேத பர்வம் 47வது அத்யாயம் 8வது சுலோகமும் கூறும். ஆராயியற்கையவா என்பது க்ருஷ்ணவர்த்மா என்னும் மகாபாரதம் ஆதிபர்வம் (69வது அத்யாயம் 63வது சுலோகத்தினால் கூறப்பட்டிருக்கிறது. ஆசையை விட்டு ஒழிக்க வேண்டுமென்பதைப் பற்றிக் கீழ் குறிப்பிட்டிருக்கும் சுலோகங்களும் கவனிக்கத்தக்கன. திருக்குறளாசிரியர் ஜீவன் முக்தியை தங்கொள்கையாகக் கொண்டனர் என்பதை இக்குறள் அறிவிக்கின்றது.*

## ஸனாதன தர்மப்புதிர்கள் ஜனவரி வினாக்கள்

1. அகஸ்த்யருக்கு ஹயக்ரீவர் லலிதா சகஸ்ர நாமத்தை அருளிய இடம்
2 ஹைமவதி யார் ?
3 நமஸ்காரம் எஹ்தனை விதம்?
4 அம்மனின் தர்மபீடம் எங்குள்ளது?
5 காகதாலீய ந்யாயம் பொருள் என்ன?
6 சூர்யனுக்கும் சாயதேவிக்கும் பிறந்த பிள்ளை
7 ப்ருத்வீ ஸூக்தம் எதில் உள்ளது?
8 கோதாவரி நதியின் பிறப்பிடம்
9 கஜேந்த்ரனை பிடித்த முதலையின் பெயர்
10 முடவன் முழுக்கு என்ன பொருள்?

## ஸனாதன தர்மப்புதிர்கள் டிசம்பர் விடைகள்

1. தாம்ரபரணி
2. பாவனோ உபனிஷத் பஹ்வருசோ உபனிஷத்,த்ரி
3. மல்லிகார்ஜுனம் ஸ்ரீசைலம்
4. காளஹஸ்தி
5. சரயு நதி
6. ஆச்சாரி,தச்சர்,கொல்லர்,கம்மாளர், ஸ்தபதி
7. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்
8. காமகோடி பீடாதிபதிகளின் வரலாறு கூறும் நூல்
9. காஸ்மீரமக்கள்
10. திருவெண்காடர்.

# இராமாவதாரம் எதற்காக ?

இராமாயணம் சீனிவாசன்

*ஸுச்ரோணி பரிதுஷ்டோ அஸ்மி கமிஷ்யாமி யதா$_2$க$_3$தம் । 29 ।*

அழகிய இடை உடையவளே. நான் மிகவும் த்ருப்தி அடைந்து மகிழ்ச்சி கொண்டவராக உள்ளேன். நான் எப்படி வந்தேனோ அப்படியே போகின்றேன் என்றான்.

இங்கு நடந்ததை எல்லாம் அறிந்த கௌதமர் செய்யத்தகாத செயலை செய்ததற்காக தேவேந்திரனை ஆண்மையற்றவராக சபித்து தனது மனைவியையும் சபித்தார்.

*இஹ வர்ஷ சஹஸ்ராணி*
*பஹுனி நிவஸிஷ்யஸி ।। 29 ।।*

பல்லாயிரம் வருடங்கள் நீ இங்கேயே வசிப்பாயாக.

*வாதப$_4$க்ஷா நிராஹதரா*
*தப்யந்தீ ப$_4$ஸ்மசாயினீ ।।*
*அத்$_3$ருச்யா ஸர்பூதானாம்*
*ஆச்ரமே அஸ்மான் வஸிஷ்யஸி ।। 30*

காற்றை ஆகாரமாக உண்டு, தவமியற்றி கட்டாந்தரையில் படுத்து, எந்த ஒரு ஜீவராசியின் கண்ணிலும் படாமல், இந்த குடிலிலேயே வசிப்பாயாக.

*யத$_3$ா த்வேதத் வனம் கோ$_4$ரம் ।*
*ராமோ தசரதாத்மஜ: ।।*
*ஆக$_3$மாஷ்யதி து$_3$ர்த$_4$ர்ஷ*
*ததா$_3$ பூதா பவிஷ்யஸி ।। 37*

இந்த கோரமான காட்டிற்கு தசரதனின் மகனான ராமன் வருவானோ, அவனோ காண்பதற்கு கடினமானவன், அப்போது நீ தூய்மையானவளாக ஆவாய்.

*தஸ்ய ஆதி$_2$த்$_2$யேன துர்வருத்தே ।*
*லோப மோஹ விவர்ஜிதா ।*
*மத்ஸதஹாஸம் முதா$_3$ யுக்தா*
*ஸ்வயம்வபுர் தாரயிஷ்யஸி ।। 32*

தீய நடத்தை கொண்டவளே, அவனுக்கு நீ விருந்து உபசாரம் செய்து பேராசை, மயக்கம் ஆகியவை அற்றவளாய் உன் உண்மையான வடிவில் மகிழ்ச்சியுடன் என்னிடம் நீவந்தடைவாய்.

*ஏமுக்த்வா மஹாதேஜா கௌ$_3$தமோவ து$_3$ஷ்டசாரிணீம்*
*இமம் ஆச்ரமம் உத்ஸ்ருஜ்ய ஸித்தசாரணஸேவிதே ।*
*ஹிமவத் சி$_2$க$_2$மா ரம்யே ததேப மஹாதபா: ।। 33*

தீய நடத்தை கொண்டவளாக அவளை கௌதமர் இங்ஙனம் கூறி, இந்த குடிலை விட்டு, சித்தர்களும், சாரணர்களும் இருக்கக் கூடிய இமயமலையில் அழகிய உச்சியில் மிகுந்த தவசியானவர் தவம் செய்கின்றார்.

இந்த வரலாற்றினை சொல்லி முடித்த விச்வாமித்ரர் ராமனை பார்த்து இங்ஙனம் கூறினர்.

*தத$_3$ா க$_3$ச்ச$_2$ மஹாதேஜ ஆச்ரமம் புண்யகர்மண: ।*
*தாரயைனம் மஹாபாகாம் அஹல்யாம் தேவரூபிணீம் । 49*

செயல்கள் செய்தவரின் குடிலுக்கு நீவா. தேவ வடிவு கொண்டவளாகிய அத்ருஷடம் உடைய அஹலிகையை கரையேற்றுவாயாக.

*விச்வாமிதர வச: ச்ருத்வா ராக$_4$வ : ஸஹலக்ஷ்மண :*
*விச்வாமித்ரம் புரஸ்க்ருத்ய ।*
*ஆச்ரமம் பாவிவேச ஹ*
*த$_3$த$_3$ர்ச ச மஹாபாகாம் தபஸாம் த்யோதித ப்ரபாம் । 12*

விச்வாமித்ரரின் சொற்கேட்டு ராமன் லக்ஷ்மணனுடன் விச்வாமித்ரர் முன் செல்ல ஆசரமத்திற்குள் நுழைந்தான். தவத்தினால் ஒளி மிகுந்தவனாய் காணப்பட்ட மிகுந்த அத்ருஷ்டம் கொண்ட அந்த அஹல்யாவை கண்டான்.

*(தொடரும்)*

# ஸத் விஷய ஸங்கரஹம்

| | |
|---|---|
| सर्वज्ञात्मा | *ஸர்வஜ்ஞாத்மா* |
| आभिनवशङ्कर: | *அபிநவசங்கரர்* |
| भगवन्नाम | *பகவந்நாம* |
| बोधेन्द्रस्सरस्वती | *போதேந்த்ர ஸரஸ்வதீ* |
| परमशिवेन्द्रसरस्वती | *பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ* |
| विश्वाधिकेन्द्र सरस्वती | *விச்வாதிகேந்த்ர ஸரஸ்வதீ* |
| महादेवेन्द्र सरस्वती | *மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ* |
| चन्द्रशेखरेन्द्र सरस्वती | *சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ* |
| आनन्दगिरि: | *ஆனந்தகிரி* |
| विद्यारण्य: | *வித்யாரண்யர்* |
| सदाशिव ब्रह्मेन्द्र सरस्वती | *ஸதாசிவப்ரம்ஹேந்த்ர ஸரஸ்வதீ* |
| चित्सुखाचार्य: | *சித்ஸுகாசார்யர்* |
| वाचस्पति मिश्र: | *வாசஸ்பதிமிச்ரர்* |
| मुधुसूदन सरस्वती | *மதுஸூதன ஸரஸ்வதீ* |
| (गौड) ब्रह्मानन्द सरस्वती | *பிரும்மானந்த ஸரஸ்வதீ* |
| अमलानन्द सरस्वती | *அமலானந்த ஸரஸ்வதீ* |
| अप्पयतीक्षित: | *அப்பய்ய தீக்ஷிதர்* |

| | |
|---|---|
| अभिनवगुप्त: | *அபிநவ குப்தர்* |
| गौतममहर्षि: | *கௌதம மஹர்ஷி* |
| कपिलमहर्षि: | *கபில மஹர்ஷி* |
| कणादमहर्षि: | *காணாத மஹர்ஷி* |
| पणिनि: | *பாணிநி* |
| कात्यायन: (वररुचि:) | *காத்யாயனர் (வரருசி)* |
| पतञ्जलि: | *பதஞ்ஜலி* |
| जैमिनि: | *ஜைமினி* |
| शवरस्वामी | *சபரஸ்வாமீ* |
| कुमारिलभट्ट: | *குமாரிலபட்டர்* |
| पार्थसारथि मिश्र: | *பார்த்தஸாரதி மிச்ரர்* |
| गदधरमिश्र: | *கதாதரமிச்ரர்* |
| जगदीशा: | *ஜகதீசர்* |
| कैयट: | *கையடர்* |
| भट्टोजिदीक्षित: | *பட்டோஜிதீக்ஷிதர்* |
| श्रीधर वेङ्कटेशार्य: | *ஸ்ரீதர வேங்கடேசார்யர்* |
| नीलकण्ठ दीक्षित: | *நீலகண்ட தீக்ஷிதர்* |
| गोविन्द दीक्षित: | *கோவிந்த தீக்ஷிதர்* |

# தமிழ் பாகவதம்

தொகுப்பு : வீராபுரம் சம்பத் தீக்ஷிதர்

## ஆசார்யனைப் பிரார்த்தித்தல்

1. பெருமை பொருந்திய வேங்கடநாதன் எனும் நல்லொழுக்க சீலரும், கவி தர்க்கம் இவைகளின் சிங்கம் போன்றவரும், வேதாந்தாசார்யர் என்று வரிக்கத்தகுந்தவருமான ஸ்வாமி தேசிகன், எப்பொழுதும் அடியேன் நெஞ்சில் நிலைபெற்றிருக்க வேண்டும்.

2. நைமிசாரண்யம் ஸௌனகாதி முனிவர்களின் தீர்க்க ஸத்ரம் எனும் பெருவேள்வி ஸமம் ஸுத பௌராணிகர் அங்கு எழுந்தருளினார். அவர்க்கான ஆஸனத்தில் அமர்ந்த பின்னர் ஸௌனகாதி முனிவர்கள் "பகவானின் கதையாம் ஸ்ரீமத் பாகவதமாம் அமுதத்தை அனுபவிப்பதே நல்வாழ்வு" என்று கருதியவர்களாய் அவரைப் பிரார்த்தித்தார்கள்.

3. "அறியாமை இருளை அகற்றும் சூரியனின் ஒளிக்குச் சமமான ஒளியைவுடைய ஸுத பௌராணிகரே! பகவானின் கதையெனும், செவிக்கு ரஸாயணத்தை எங்களுக்குச் சொல்ல வேண்டும்" என்று வேண்டினர்.

4. "ஸ்வாமி புகழ் அளிப்பவைகளில் சிறந்ததும், புனிதமானதும், எம்பெருமான் கண்ணனை அடைய நல்ல ஸாதனம் எதுவோ, அதை இப்பொழுது எங்களுக்கு தங்களால் நன்றாகச் சொல்லப்பட வேண்டும்" என்றனர்.

5. "ஸௌனகரே! உமது மனம் பகவத்கீதையில் சொல்லியுள்ளபடி "பரிப்ரச்னேன ஸேவையா" என்பதற்கேற்ப பகவானின் ஸித்தாந்தங்களின் தீர்மானமானதும், உலகியல் வாழ்வாய் பயத்தை அடியோடு போக்குவதுமான செய்திகளைப் பூர்வாசார்யர்கள் அருளியவைகளை, ஆய்ந்து சொல்கிறேன். கேட்பீராக"

6. இந்த ஸ்ரீமத் பாகவதத்தை பரீட்சித்து மஹாராஜாவிற்குச் சொல்ல ஸ்ரீ சுகப்பிரம்மம் அரசவையில் எழுந்தருளியிருந்த ஸமயம், தேவர்கள் அமுத கலசத்தை ஏந்தியவர்களாய் அந்த அரசவைக்கு வந்தனர்.

7. தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் நலம் உடைய தேவர்கள் சுகப்பிரம்மத்தை வணங்கி, "ஸ்வாமி இது தேவர்கட்கான அமுதம் இந்த அமுதத்தைப் பெற்றுக் கொண்டு ஸ்ரீமத் பாகவதமாம் அமுதத்தைக் கொடுங்கள் என்று பிரார்த்தித்தனர்.

8. இதைக் கண்ட பரீக்ஷித்து ''பாகவதம் எங்கே?'', இந்த தேவர் அமுதம் எங்கே? ஸ்படிகமோ அல்லது மணியோ நிகர்ஆகாதவை அல்லவா! என்று விசாரணை செய்து, தேவர்களின் அறியாமையை எண்ணிப் பரிஹஸித்தான்.

9. வந்தேறிய தேவர்கள் பக்தி இல்லாதவர்கள் என்றறிந்து சுப்பிரமம் ஸ்ரீமத் பாகவதத்தை அவர்களுக்கு அளிக்கவில்லை.

10. கலியுகத்தில் ஸ்ரீமத் பாகவதம் பகவத் ஸ்வரூபமான சாஸ்திரம் என்றே கருதினார்கள். அதைப் படிப்பதனால், கேட்பதனால் இவ்வுலக வாழ்வு மட்டும் இன்றி வைகுண்ட உலக வாழ்வும் அமையும். அதாவது இம்மைக்கும், மறுமைக்கும் துணையாகும் ஒரே சாஸ்த்ரம் ஸ்ரீமத் பாகவதமே அதற்கு அடிப்படை.

11. ஒரு ஸமயம் ஸனகாதி முனிவர் நால்வர் ஸத்ஸங்கத்திற்கு (நல்லோர் இணக்கம்) விசாலம் எனும் நகருக்கு வந்தனர். அங்கு தேவரிஷி நாரதரைக் கண்டனர்.

12. ''நாரத மஹரிஷியே வாடிய முகத்தினராய் வருகிறீர்களே உமக்கு என்ன மனக்கவலை! எங்கிருந்து வருகிறீர்கள், எங்கு செல்கிறீர்கள்!''

13. நாரதர் சொன்னார் ''நான் உலகைச் சுற்றி வந்தேன். பாரததேசம் மிகவும் உத்தமமான தேசம் என்று வந்தேன். புஷ்கரம் ப்ரயாகை, காசி, கோதாவரீ ஆகிய தீர்த்தங்களையும் ஸேவித்து வந்தேன்.''

14. ''ஹரி க்ஷேத்ரமாம் ஹரித்வார், குருக்ஷேத்ரம், ஸ்ரீரங்கம், ஸேது முதலிய புண்ணிய க்ஷேத்ரங்களுக்கும் சென்று இங்கும் அங்குமாய் சுற்றி வந்தேன். நான் கண்ட உண்மை என்ன தெரியுமா?''

15. ''எங்கும் யோகிகள் இல்லை, சித்தர்கள் இல்லை, ஞானிகள் இல்லை, நற்செயல்கள் செய்பவர்கள் இல்லை. கலியுகமாம் பெருந்தீயினால், பகவானை அடைவதற்கான ஸாதனங்களாம் ஞான, கர்ம, புத்தி யோகங்களைக் கண்டேன் இல்லை''

16. ''கலியுகத்தில் பெரும்பாலான மனிதரிடம் ஸத்யம், தபம், அகத்தூய்மை, கருணை, தானம் இவை காணப்படவில்லை. எல்லோரும் கேவலம் வயிற்றுப் பிழைப்பு (உண்டியே உடையே உகந்து ஓடும்) ஒன்றையே நோக்கமாய்க் கொண்டு வாழ்பவர்களாய், கபடம், வஞ்சனை, இவை கலந்த பேச்சை உடையவர்களாய்த்தான் காணப்படுகிறார்கள்.''

## ஆதி சங்கர பகவத் பாதர் அருளிய
# குர்வஷ்டகம்

**சரீரம் ஸுரூபம் ததா வா கலத்ரம், யஷஷ்சாரு சித்ரம் தனம் மேரு துல்யம் /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (1)**

நல்ல அழகிய உடல், அதற்கு அனுசரணையாக அழகிய மனைவி, குறையற்ற புகழ், விசித்ரமான மேருமலைக்கு இணையாக பணம் (செல்வம்) இருந்தும், மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**கலத்ரம் தனம் புத்ர பௌத்ராதி ஸர்வம், க்ருஹோ பாந்தவா: ஸர்வமேதத்தி ஜாதம் /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (2)**

மனைவி, பணம் (செல்வம்) மகன் பேரன் முதலான வாரிசுகள், வீடு, உறவினர்கள், சுற்றத்தார் ஆகிய அனைத்தும் இருந்தும், மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**ஷடங்காதி வேதோ முகே ஷாஸ்த்ர வித்யா, கவித்வாதி கத்யம் ஸுபத்யம் கரோதி /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (3)**

எவருடைய வாயில் ஆறு அங்கங்களுடன் கூடிய வேதம், சாத்திரவித்தை ஒலித்து சோபை அளித்துக் கொண்டிருக்கிறதோ, கவிதை இயற்றும் திறமை மிகுந்து பாக்களும், வசன நடையும் இயற்றப்படுகிறதோ, இவையனைத்தும் இருந்தும், மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**விதேசேஷு மான்ய: ஸ்வதேஷேஷு தன்ய:, ஸதாசார வ்ருத்தேஷு மத்தோ ந சான்ய: /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (4)**

வெளிநாடுகளில் நல்ல கௌரவம், மரியாதை, தன்னுடைய நாட்டில் நல்ல பண வருவாய், நல்லொழுக்க நடத்தையில் தன்னை மில்சியவர் எவரும் இல்லை என்ற அஹங்காரம், இவையனைத்தும் இருந்தும், மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**க்ஷமாமண்டலே பூப பூபால வ்ருந்தை:, ஸதா ஸேவிதம் யஸ்ய பாதாரவிந்தம் /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (5)**

பூவுலகில் பெரிய பெரிய அரசர்கள், மஹாராஜாக்கள் ஆகியோர்களால் எவருடைய பாதத் தாமரைகள் எப்போதும் வணங்கப்பட்டு இருக்குமோ அத்தகையவரின் மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**யஷோ மே கதம் திக்ஷு தான ப்ரதாபாத், ஜகத்வஸ்து ஸர்வம் கரே யத்ப்ரஸாதாத் /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (6)**

அதிக அளவில் தானம் அளிப்பவர் என்ற புகழ் பல திக்குகளிலும் பரவி எவருக்கு உள்ளதோ, எவருடைய அருளால் தான் உலகில் எல்லா பொருள்களும் கைக்கு கிடைக்குமோ அத்தகைய நபரின் மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**ந போகே ந யோகே ந வா வாஜிராஜௌ, ந கந்தாமுகே நைவ வித்தேஷு சித்தம் /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (7)**

எவருடைய மனம் போகத்திலோ, யோகத்திலோ, தேவைகள் நிறைந்ததிலோ, அழகிய மனைவியின் அழகிலோ, தன்னிடம் உள்ள பணம் செல்வத்தாலோ ஈடுபடாமல் அதாவது உலக விஷயங்களில் முபமையாக விரக்தி அடைந்து இருந்தும், அத்தகைய நபரின் மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**அரண்யே ந வா ஸ்வஸ்ய கேஹே ந கார்யே, ந தேஹே மனோ வர்ததே மே த்வனர்த்யே /**
**மனச்சேன லக்னம் குரோரக்ரிபத்மே, தத: கிம் தத: கிம் தத: கிம் தத: கிம் // (8)**

என்னுடைய மனம் காட்டில் ஈடுபடுவதில்லை, என்னுடைய வீட்டிலும் இல்லை, தான் செய்யும் செயலிலும் இல்லை, என் உடலைப் பற்றியும் நான் நினைத்துப் பார்ப்பதில்லை என்று இங்ஙனம் விரக்தி அடைந்த நிலையில் உள்ள நபரின், மனமானது குருவின் தாமரைத் திருவடிகளில் சரணடையாவிடில் என்ன பயன்? என்ன பயன்? என்ன பயன்?

**குரோரஷ்டகம் ய: படேத் புண்யதேஹீ, யதிர் பூபதிர் ப்ரஹ்மசாரீ ச கேஹீ /**
**லபேத் வாச்சிதாதம் பதம் ப்ரஹ்மஸம்ங்ஞம், குரோருக்த வாக்யே மனோ யஸ்ய லக்னம் // (9)**

தூய்மையான உடல் கொண்ட துறவியோ, அரசனோ, பிரம்மச்சாரியோ, அல்லது இல்லறத்தானோ இந்த குருவின் அஷ்டக சுலோகத்தை படித்து குரு சொன்ன சொற்களில் எவர் மனம் லயித்து உள்ளதோ அவர் தான் விரும்பிய பொருள் வடிவான பிரம்ம பதத்தினை அடைகின்றார்.

# வேத மந்த்ரார்தங்கள்

''ஆதித்யோ வா ஏஷ ஏதன் மண்டலம்'' உண்மையில் அந்த ஆதித்யன் பரமாத்வே. இந்த மண்டலம் காய்ந்து ஒளி வீசுகிறது. (அதை வேதமயமாகவும் அதில் வேத புருஷனான பரமாத்மா உறைபவனாக த்யானிக்கவேண்டும். )

அங்கு ப்ரசித்தமான ரிக் வேத மந்த்ரங்கள் உள்ளன. அது ரிக் வேத மண்டலமே, ரிக்குகளின் உறைவிடமே. இந்த மண்டலத்தில் கொழுந்துவிட்டெரியும் ஜ்வாலைகள் எவையோ அவை சாமவேத மந்த்ரங்கள். அவைகளின் உறைவிடம்.

இந்த மண்டலத்தில் ஜ்வாலையில் உள்ல புருஷன் எவனோ அவன் யஜுர்வேத மந்த்ரங்களை வடிவாகக் கொண்டவன். யஜுர்வேதத்தின் உறைவிடம்.

த்ரயீவித்யா எனும் வேதம் மூன்றும் ஆதித்யமண்டலமாகப் ப்ரகாசிக்கிறது. ஆதித்யனுள் உறைபவன் பொன்வடிவமான புருஷன். ''ஆதித்யோ வை தேஜ ஓஜோ பலம்''

ஆதித்யனே இவை எல்லாம். ஒளி வீர்யம் , பலம், கீர்த்தி, கண், காது, 'சரீரம் மனம் கோபம், மனு. யமன், ஸத்யதேவதை, மித்ரன் வாயு, ஆகாசம் ப்ராணன் , லோகபாலகர், ப்ரம்மா, இன்னதென்று விவரிக்க முடியாத தத்வம். தத் என்றும் ஸத் என்றும் கூறப்படுவது.

மெய்ப்பொருள், அன்னம், அம்ருதம், ஜீவன், உலகம், எல்லையில்லா ஆனந்தம், தானே தோன்றிய ப்ரம்மா. இப்புருஷன் அழிவில்லாதவன், எல்லா உய்ர்களுக்கும் அடிபதி. இப்படி அறிபவன் ப்ரம்மாவுடன் ஸாயுஜ்ய பதவியையும் ஸாலோக பதவியையும் அடைவான்.

இந்த்ரன் முதலிய தேவர்களுடன் ஸாயுஜ்யப் பதவியையும், ஸமான ஐஸ்வர்யத்தையும் ஸமான லோகத்தையும் அடைவான்.

## ''வாக் அம்ப்ருணி ஸூக்தம்'
## ''அஹம் ருத்ரேபிர்வஸுபிச்சராமி''

நான் ருத்ரகளுடனும் வஸுக்களுடனும் ஆதித்யர்களுடனும் சஞ்சரிக்கிறேன். மித்ரன், வருணன், இந்த்ரன் அக்னி மற்றும் இரண்டு அஸ்வினீ தேவர்களைத் தாங்குகிறேன். 1

எதிரிகளை அழிப்பவனான ஸோமனையும், த்வஷ்டாவையும், பூஷணனையும், நானே தாங்குகிறேன். வேள்வியில் ஆஹுதி அளிப்பவனும், ஸோமரஸத்தை பிழிபவனும்,

அதை தேவர்கள் பெறச்செய்பவனுமான யாக யஜமானனுக்கு, நான் செல்வத்தை அளிக்கிறேன். 2

நானே இந்த ராஷ்ட்ரமாகி அதன் தலைவியாக உள்ளேன். என்னை வழிபடுபவர்களுக்கு செல்வத்தை அளிக்கிறேன். நான் எல்லாமறிந்தவள். வழிபடத்தக்கவர்களுள் முதன்மையானவள். பலவடிவங்களைத் தாங்கி பலவழிகளில் ஆன்மாவாக உயிர்களில் நுழைகிறேன். அதனால் தேவர்கள் என்னை பல இடங்களில் நிறுவியுள்ளனர். 3

யார் உணவை உண்கிறாரோ, பார்க்கிறாரோ, ஸ்வாசிக்கிறாரோ, பேசப்பட்டதைக் கேட்கிறாரோ அவர் என்மூலமே இவைகளைச் செய்கிறார். என்னை அறியாதவர்கள் அழிகிறார்கள். அன்பனே ஸ்ரத்தை உடைய உனக்குச் சொல்கிறேன் கேள். 4

இவையெல்லம் நானே என்று சொல்கிறேன். தேவர்களாலும் மனிதர்களாலும் வழிபட்டவள் நானே. யாரை நான் விரும்பிகிறேனோ அவனை அனைவரிலும் உயர்ந்தவனாக, ரிஷியாக, சிறந்த மேதையாக ஆக்குகிறேன். 5

நன்மையை வெறுக்கும் எதிரிகளைக் கொல்வதற்காக ருத்ரனின் வில்லை வளைக்கிறேன். நான் மக்களுக்காகவே எதிரிகளை எதிர்க்கிறேன். நான் விண்ணிலும் மண்ணிலும் புகுந்து நிறைந்திருக்கிறேன். 6

இப்புவிக்கு மேலே உள்ளதும் தந்தைக்குச் சமமானதுமான வானத்தைப் படைத்தேன். என் படைப்பாற்றல் நீரிலும் கடலிலும் உள்ளே உள்ளது. அதனால் எல்லா உலகங்களிலும் நிறைந்திருக்கிறேன். அதுபோல் வானையும் என் உடலால் தொடுகிறேன். 7

உலகைப் படைக்கத் தொடங்கும்போது நானே காற்றைப்போல் இயங்குகிறேன். நான் வானைவிட உயர்ந்தவள். பூமியைவிட மேலானவள். இவ்வாறெல்லாம் என் மகிமை உள்ளது. 8

**வாசகர்கள் அனைவருக்கும்**
**மகர சங்கராந்தி வாழ்த்துக்களைத்**
**தெரிவித்துக் கொள்கிறோம்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி 9

ப்ரம்மஸ்ரீ அடையபலம் ராமக்ருஷ்ணதீக்ஷிதர்



மகான் அப்பைய்யதீக்ஷிதரை எல்லரும் அறிவர் 104 நூல்களை எழுதி லோகோபகாரம் செய்தவருக்கு சின்னபொம்மன் கனகாபிஷேகம் செய்தான். அவரும் இந்நாணயத்தைக்கொண்டு சிவ விஷ்ணு பேதமில்லாமல் ஆலயங்களை நிர்மாணம் செய்து 500 வித்வான்களுக்கு வேத வேதாந்தத்தை கற்பித்தார். அவர் கட்டிய ஆலய ஜீர்ணோத்தத்திற்காக பெரியவா என்னைக் கூப்பிட்டு அனுப்பி சாஸ்த்ர அத்யயனத்திற்காக கட்டப்பட்ட ஆலய ஜீர்ணோத்தாரணம் யாசகத்தினால் செய்யப்படக் கூடாது, எனவே கோவை அருகே உள்ள கே வில்லேஜஸ் என்று இருக்கும் இடத்தில் உபன்யாஸம் செய், இதில் வரும் தனத்தைக் கொண்டு புதுப்பிக்கலாம் என்றார்கள். நானும் ஒரு மாதம் அங்கு உபன்யாசம் செய்து பெரிவாளை தர்சனம் செய்தேன். அவர் என்னிடம் கார்யம் சுக்லபக்ஷமா க்ருஷ்ணபக்ஷமா (வளர்ச்சியா தேய்மானமா?) என்று கேட்க உங்கள் அருளால் பௌர்ணமிதான் என்றேன். அவரும் மிகவும் சந்தோஷப்பட்டு ஒரு ருத்ராக்ஷமணியைக் கொடுத்து வலக்கையில் கட்டிகொள் என்றார்கள். இது நடந்தது 1958இல்.

அவர் சொன்னபடி அதை அணிந்து வந்தேன். 1980 ஆம் வருடம் வில்லிவாக்கத்திற்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்தபோது ஜன்னலின் வெளியில் இருந்த என் கைமீது லாரி ஒன்று மோத நான் விழித்துக்கொண்டேன். பெரிய காயமில்லாமல் தப்பினேன். பெரிவாளின் கருணையை வியக்கிறேன். வலக்கையில் மணியை அணியச் சொன்னதன் பொருள் 22 வருடங்களுக்குப் பிறகுதான் புரிந்தது. அநந்தகோடி நமஸ்காரங்களை தினமும் அம்மகானுக்கு செய்து பிறவிப்பயனை அடைந்ததாகவே எண்ணுகிறேன். இப்படி பல நிகழ்ச்சிகள் என் வாழ்க்கையில்.

# வால்மீகி ப்ரதீபம் 47

இளம்பூரணர்.

## தூதன் யார் ?

*பூதாசர்தா: விபத்யந்தே தேசகால விரோதித:*
*விக்லமம் தூதமாஸாத்ய தம; ஸூர்யோதயே யதா ।।*
*ஆர்தானி அர்தாந்த்ரே புத்தி நிச்சிதாபி ந சோபதே*
*காதயந்தி ஹி கார்யாணி தூதா: பண்டிதமானின: ।।*

சுந்தர காண்டம்

தன்னை பண்டிதனாக நினைத்துக்கொண்டு ஒரு கெட்ட தூதன் செய்யும் கார்யங்கள் அனைத்தும் சோபிப்பதில்லை. முழுவதும் சூர்யன் முன் இருள் போல் நாசமடைகின்றன. இது சுந்தர காண்டத்தில் அனுமான் கூறும் வாக்கு. சீதையைத் தேடி அலுத்துப் போனபின் இப்படி கூறுகிறார். ஒரு நல்ல தூதனின் இலக்கணத்தையும் கெட்ட தூதனின் இலக்கணத்தையும் விளக்குகிறார். இக்காலத்தில் மட்டுமல்லாமல் எக்காலத்திற்கும் பொருந்தும் கூற்று. AMBAASADOR கள் ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு. அவர்கள் ஆற்றும் பணி சிறப்பானது மட்டுமல்ல ஜாக்ரதையானதும் கூட.

ஒவ்வொரு நாளும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டும். அளவோடு பேசுதல், அளவோடு பழகுதல் என்று அளவோடு இருத்தல் வேண்டும். எல்லா நாடுகளும் நட்பு நாடுகள் அல்ல. இன்று நட்பாக இருப்பது நாளை பகையாக மாறும். நாடுகளின் ப்ரதி நிதியாகசெயல்படும் தூதர்கள் இதற்குப் பொறுப்பேற்க வேண்டிய அவஸ்யமுள்ளது. இதைத்தான் அனுமார் கூறுகிறார். சீதை கிடைக்கவில்லை என்றதும் கூறும் வார்த்தை இவை. உலகில் இவ்வளவு வருடங்களாக பலதூதர்கள் பல்வேறு நாடுகளில் பணி செய்துள்ளார்கள். நல்லவையும் உள்ளன அல்லவையும் உள்ளன நாடுகளின் மானம் போகும் செயல்களையும் செய்துள்ளார்கள். இரண்டாம் உலகப்போருக்குப்பின் அமெரிக்கா தன்னை வல்லரசாக்கிக் கொண்டது. அது செய்த அனியாயங்கள் அடாவடித்தனம் கணக்கில் எழுதமுடியாதவை. உதாரணமாக வியட்னாம் க்யூபா கொரியா இம்மூன்றின்மீதும் அது செய்த அடாவடித்தனம் ஜகத்ப்ரசித்தி பெற்றது. க்யூபாவைத் தவிர மற்ற இரண்டு நாடுகளும் நிர்மூலமாக்கப்பட்டன. ரஷ்யா இன்னொரு பக்கம் தன் அதிகாரபலத்தைக் காட்ட நாடுகள் நாசமாக்கப்பட்டன. அவைகளின் வெளி நாட்டுக் கொள்கைகள் எப்படி இருப்பினும் அக்காலத்தில் இருந்த அன்னாட்டுத் தூதர்களே இதற்குகாரணம். இவை மோசமான சான்றாக இருப்பினும் இதற்கு மாறாக நம்னாட்டு தூதர்களைச் சொல்லலாம். உதாரணம் விஜயலக்ஷ்மி பண்டிட். டாக்டர் ராதாக்ருஷ்ணன். இவர்கள் ஆற்றிய பணி மிக சிறப்பாக இன்றளவும் உள்ளது. மேலே சொன்ன நாடுகளின் தூதர்கள் நினைத்திருந்தால் போர்கள் மூளாமல் செய்திருக்கலாம். நல்ல தூதர்களாக அவர்கள் இல்லை. விளைந்தது விபரீதம். அப்படியாயின் நல்ல தூதனுக்கு எங்கே போவது? அடுத்த கட்டுரையை வாசிக்கவும்.

# இதோ அந்த தூதன்

*கார்யே கர்மணி நிர்திஷ்டே யோ*
*பஹூன்யபி ஸாதயேத்*
*பூர்வகாயி விரோதேன ச கார்யம்*
*கர்துமர்ஹதி*
*॥*
*ந ஹி ஏக: ஸாதகோ ஹேது:*
*ஸ்வல்பஸ்யாபீஹ கர்மண:*
*யோ ஹ்யர்தம் பஹுதா வேத ஸ*
*ஸமர்தோஅர்தஸாதனே ॥*

*சுந்தர காண்டம்*

சொல்லப்பட்ட கார்யம் முடிந்தபின் அது தொடர்பாக பல வேலைகளை முடிப்பவனே சிறந்த வேலக்காரன். சின்ன வேலையாயிருப்பினும் அதை முடிக்க பல வழிகள் உண்டு. அப்படி அவ்வழிகளைத் தெரிந்து முடிப்பவன் ஸமர்தன். போன கட்டுரையில் நல்லதூதனுக்காக ஏங்கினோம். கவலை வேண்டாம். இதோ இருக்கிறார் நம் அனுமார் என்கிறார் வால்மீகி. ஒரு நல்ல தூதனுக்கு வேண்டிய அனைத்து லக்ஷணங்களையும் பெற்றவர் அவர். அவரைப் பார்த்தமாத்ரத்திலேயே ராமபிரான் அவரைப் பாராட்டுகிறார். சுந்தரகண்டத்தில் இவர்தான் நாயகன். ராம நாமாவைக் கொண்டு அரிய செயல்களைச் செய்தவர்.

சொல்லின் வலிமை செயலில் திறமை அப்பழுக்கற்ற பக்தி. அசாத்ய வீரம் இவைகளுடன் அவர் செய்த பணி மகத்தானது. சீதாபிராட்டியும் தன்னைக்காக்க வந்த தூதன் என்று தெரிந்ததும் விக்ராந்தஸ்த்வம் ப்ராஞ்யஸ்த்வம். ஸமர்தஸ்த்வம் (விக்ரமமுடையவனாகவும் பேரறிவுள்ளவனாகவும் சமர்த்தனாகவும் நீங்கள் இருக்கிறீர்கள்) என்று பாராட்டுகிறாள். அவளிடத்தில் ராமகதையைச்சொல்லி ராவணனிடத்தில் தூதவாக்யத்தைச் சொல்லி. ராமரிடம் கண்டேன் சீதையை என்று கூறி தான் ''சொல்லின் செல்வன்'' என்று காண்பித்து விடுகிறார். பலதடவை யோசித்து அரக்கர்களிடத்தில் தண்டோபாயமே சிறந்தது என்று எண்ணி தனது பராகர்மத்தை ராவணனுக்குக் காண்பிக்கிறார்.

தன் ஒவ்வொரு செயலிலும் சிறந்ததூதன் என்பதைக் காண்பிக்கிறார். ஒரு கர்மயோகியாகச் செயல்பட்டவர். இத்தனைக்கும் ஒரு அரச பதவியையாவது. பெரும் செல்வத்தையாவது விரும்பவில்லை. அதனால்தானோ என்னவோ பூஜைக்குரியவாகிறார். வேறு யாருக்கும் கிடைக்காத பேறு இது. யுத்த காண்டத்தில் சீதாபிராட்டியினால் அங்கீகரிக்கப்பட்டு ராமர் தந்த மணியை அலங்கரித்தவர். இவனல்லவோ தூதன்.

ஸ்ரீ வைஷ்ணவத்தில் அவருக்கு ஆசார்யஸ்தானமே தரப்பட்டுள்ளது. ஜீவாத்மா சீதையை பரமாத்மா ராமனிடம் சேர்க்கும் ஆசார்யன் என்பர் வைணவ அன்பர்கள். அப்பேர்ப்பட்ட ஸ்தானம் அவருக்கு. ''புத்திர்பலம் யசோ தைர்யம். நிர்பயத்வம் அரோகதா அஜாட்யம் வாக்படுத்வம் ச ஹனூமத்ஸ்மராணாத் பவேத்'' புத்தி. பலம். புகழ் தைர்யம். நோயின்மை. பயமின்மை சொல்வன்மை இவை அனைத்தும் அனுமரை நினைத்தால் வரும் என்பது ப்ரசித்திபெற்ற ஸ்லோகம். நாமும் அனுமத் ஜயந்தி அன்று நினைத்து அவர் அருளைப் பெறுவோம். அந்த தூதனை நினைத்து செயலாற்றுவோம்.

# தை மாத ஸ்ரீமடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| 15-1-2019 | செவ்வாய்கிழமை | உத்த்ராயண புண்யகாலம் , மகர சங்கராந்தி |
| 17-1-2019 | வியாழக்கிழமை | ஏகாதசி |
| 18-1-2019 | வெள்ளிக்கிழமை | த்வாதசி |
| 19-1-2019 | சனிக்கிழமை | ப்ரதோஷ பூஜை |
| 19-1-2019 | சனிக்கிழமை | ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் மாதாந்திர ஆராதனை தினம் |
| 20-1-2019 | ஞாயிற்றுக்கிழமை | பௌர்ணமி பூஜை |
| 29-1-2019 | செவ்வாய்கிழமை | அனுஷம் தேர் |
| 30-1-2019 | புதங்கிழமை | அனுஷம் பாராயணம் |
| 31-1-2019 | வியாழக்கிழமை | ஏகாதசி |
| 1-2-2019 | வெள்ளிக்கிழமை | த்வாதசி |
| 1-2-2019 | வெள்ளிக்கிழமை | மூலம் தேர் |
| 2-2-2019 | சனிக்கிழமை | ப்ரதோஷ பூஜை |
| 3-2-2019 | ஞாயிற்றுக்கிழமை | உத்ராடம் தேர் |
| 3-2-2019 | ஞாயிற்றுக்கிழமை | உத்ராடம் பாராயணம் |
| 5-2-2019 | செவ்வாய்க்கிழமை | அவிட்டம் தேர் |
| 5-2-2019 | செவ்வாய்க்கிழமை | அவிட்டம் பாராயணம் |
| 10-2-2019 | ஞாயிற்றுக்கிழமை | வஸந்த பஞ்சமி |
| 12-2-2019 | செவ்வாய்க்கிழமை | ரத சப்தமி |
| 18/1/19, 25/1/19, 1/2/19 - 8/2/19 | | வெள்ளிக்கிழமை பூஜை |

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

# ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

- அனுஷம்
- மூலம்
- உத்ராடம்
- அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்''

# மகாபெரியவாவின் திருவிளையாடல்

## "÷£õ´ Eß Áõzv¯õºQm÷h S Î ¨£õm i Ým÷hß Ý ö\õÀ¾!"

கணேசன் கன பாடிகள் என்பவர், வேதபாட சாலையில் படித்துக் கொண்டு இருந்தபோது நடந்த சம்பவம் இது.

அந்தக் காலத்து மாணவர்கள் விடுமுறையில் தங்கள் ஊருக்குச் சென்று திரும்பும்போதெல்லாம், தங்கள் குருவிற்கு காணிக்கையாக அன்போடு ஏதாவது பொருளை வாங்கி வருவது உண்டாம்.

அப்படி ஒரு சமயம் மாணவனாக இருந்த கணேசன், தன் குருவுக்குத் தருவதற்காக காய்கறிகள் கொஞ்சம் வாங்கிக் கொண்டான். அதோடு தங்கள் ஊரில் மட்டும் கிடைக்கும் ஒரு விசேஷ ரக வாழைப் பழத்தையும் கொஞ்சம் வாங்கிக் கொண்டு வந்தான்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வாங்கி வந்ததை வாத்தியாரிடம் சமர்ப்பிக்க, கணேசனும் தான் கொண்டு வந்தவற்றை தனது வாத்தியாரிடம் சமர்ப்பித்துப் பணிந்து நின்றான். அனைத்தையும் பார்த்து மகிழ்ந்த குரு, 'நீ எனக்காக ஒரு உபகாரம் பண்ணு-எல்லா காய்கறி, பழங்களையும் அப்படியே எடுத்துண்டுபோய், காஞ்சி மகாபெரியவா சன்னதியில் கொண்டுபோய் சேர்த்துடு! உனக்கு பரமக்ஷேமம் உண்டாகும்!' என்று சொன்னார்.

மாணவன் சற்று தயங்க, 'இதோ பாருப்பா, அந்த நடமாடும் தெய்வம், நமக்கு எத்தனையோ வழிகள்ல அனுகிரஹம் பொழியறது. அதுக்கெல்லாம் நாம பிரதிபலனா என்ன செய்ய முடியும்? அவர் ஒரு ஆலமரம். அந்த ஆலமரத்தைக் குளிப்பாட்ட நம்மாலே முடியாது இல்லையா? ஒருவாளி தண்ணி இல்லேன்னாலும் ஒரு உத்தரணி ஜலமாவது ஊத்தினோம்கற மனசு திருப்தியோட நாம இப்படி அப்பப்ப சின்னதா எதையாவது அவாளுக்கு செய்யலாம். அவ்வளவுதான், புரிஞ்சுதா? தயங்காம எடுத்துண்டுபோய் சேர்ப்பிச்சிட்டு வா!'

குரு சொல்ல, உடனே காய்கறி, பழம் எல்லாத்தையும் எடுத்துக் கொண்டு மகாபெரியவாளை தரிசிக்கப் புறப்பட்டான். அங்கே இந்த மாணவன் சென்ற நேரத்துல மகாபெரியவா உள்ளே இருந்தார். அதனால வெளியே நின்னுண்டு இருந்தான். வேதம் கற்கும் மாணவன் என்பதால், வேதமானவரை தரிசிக்கக் காத்துண்டு இருந்த நேரத்தை வீணாக்காம வேத மந்திரம் சொல்லலாம்னு நினைச்சுண்டு, தான் கத்துண்ட மந்திரங்கள் சிலதை சொல்லிண்டு இருந்தான். அந்த வேத சத்தம் கேட்டதும், உள்ளே இருந்து வெளியில வந்தார், மகாபெரியவா.

கணேசன் அவரை விழுந்து வணங்கிய பின், தான் கொண்டுவந்த காய், கனிகளை ஒரு பெரிய மூங்கில் தட்டில் வைத்து அவர் முன் சமர்ப்பித்து பக்தியோடு நின்றான்.

'இதெல்லாம் எனக்குன்னுதான் கொண்டு வந்தாயா?' அவர் கேட்ட முதல் கேள்வியே சிறுவன் கணேசனின் நேர்மையான பதிலை சோதிக்கும்படி அமைந்தது. மகாபெரியவா அப்படிக்

கேட்டதும், ஒரு வினாடி யோசிச்சான் அவன். தன் குரு எப்போதும் பொய் பேசவே கூடாது என்று போதனை பண்ணியது நினைவுக்கு வந்தது. ஆசிரியரோட வார்த்தைகளைக் கடைபிடிக்கும் மாணவனாக ‘இல்லை, பெரியவா, இதையெல்லாம் நான் என்னோட வாத்தியருக்காகத்தான் வாங்கிண்டு வந்தேன். அவர்தான், எல்லாத்தையும் ’பெரியவாளுக்கு கொண்டுபோய் கொடுத்துடு’ ன்னு சொன்னார்!‘ சொன்னான்.

‘இதெல்லாம் உங்க நிலத்திலே விளைஞ்சதோ?‘ ஒன்றும் அறியாதவர் போல கேட்டார். ‘இல்லே பெரியவா, எங்களுக்கு அவ்வளவு வசதி இல்லே‘

‘அப்போ காசு கொடுத்து வாங்கிண்டு வந்தியோ?‘ என்று அவனிடம் கேட்டதுமல்லாமல், அங்கே நின்று கொண்டிருந்த பக்தர்கள் பக்கம் திரும்பி ‘இந்தக் குழந்தைக்கு எவ்வளவு குரு பக்தி...! தன் குருவுக்காக பிரியமா இதெல்லாம் வாங்கிண்டு வந்திருக்கான் பாரு!‘ என்று பாராட்டிச் சொல்ல, கணேசனுக்கு ரொம்பவே சந்தோஷமாக இருந்தது.

அடுத்து யாருமே எதிர்பார்க்காதவிதமாக ஒரு திடுக்கிடும் நாடகத்தை நிகழ்த்தி அருளினார். அந்த நடமாடும் தெய்வம். மடமடவென்று கீழே குனிந்த மகான் அந்தக் காய்கனி பரப்பப்பட்ட மூங்கில் தட்டை எடுத்து தன் தலைக்கு மேல் கொண்டு சென்று தடாலென்று அத்தனையும் தனது சிரசின் மேல் அபிஷேகமாகக் கொட்டிக் கொண்டார்.

சிறுவன் கணேசன், அதை பார்த்து திடுக்கிட்டுப் போய்விட்டான். தான் ஏதாவது தவறு செய்து விட்டோமா என்று படபடப்போடு உடல் நடுங்க ஏதும் செய்வதறியாமல் விக்கித்து நின்றான்.

அந்தத் திகைப்பைக் கண்டும் காணாதவர்போல், ‘போய் உன் வாத்தியார்கிட்டே குளிப்பாட்டினுட்டேன்னு சொல்லு!‘ என்று பெரியவா சொல்ல, வித்தியாசமான செயல் போதாதென்று இந்த புதிய திருவாக்கையும் கேட்டவர்கள் ஒன்றும் புரியாமல் திருதிருத்தார்கள்.

சிறுவன் கணேசனும் எதுவும் புரியாமல், மறுபடியும் மகானை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கிவிட்டு, பிரசாதத்தை வாங்கிக் கொண்டு தயங்கியபடியே மெதுவாக நடந்தான். அப்போது அவனுக்கு குரு சொன்ன வார்த்தைகள் அவன் நினைவுக்கு வந்தது.

‘அவர் பெரிய ஆலமரம். அவரை நம்மால குளிப்பாட்ட முடியுமா? ஏதோ உத்தரணி ஜலம் விடுவோம் ! வாத்தியார் சொன்ன வார்த்தைகளுக்கு பதிலாக, ‘ இந்த எளிய காணிக்கையே எனக்கு திருப்தியானதுதான்!‘ அப்படின்னு உணர்த்தரவிதமா, ‘குளிப்பாட்டினுட்டேன்!‘ என்ற வார்த்தையை உதிர்த்திருக்கார் மகாபெரியவா என்பது அவனுக்குப் புரிந்தது.

அதுவரை கொஞ்சம் தளர்வாக இருந்தவன், குதூகலத்தோடு புறப்பட, விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள் மற்றவர்கள். மகிழ்ச்சியாக ஓடிச்சென்று தன் குருவிடம் நடந்ததையெல்லாம் சொன்னான். நெகிழ்வோடு எல்லாவற்றையும் கேட்ட அவன் குரு, காஞ்சிமுனி இருந்த திசை நோக்கி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

ஜெய ஜெய சங்கர! ஹர ஹர சங்கர! காஞ்சி சங்கர!காமகோடி சங்கர!

# புராணக் கதை

## கண்டாகர்ணன் கதை

**வாதூலன்**

யாருடைய காதுகளில் மணி உள்ளதோ அவன் கண்டாகர்ணன் என்று அழைக்கப்படுவார். அந்தபேர் கொண்ட பிசாசு ப்ரசித்தி பெற்றது. ஒருஸமயம் ஸ்ரீக்ருஷ்ணர் தனக்குப் புத்ரன் பிறக்கவில்லை என்று கவலை கொண்டு புத்ரன் வேண்டி சிவபெருமானை வணங்கி ஆசிபெற கைலாசத்திற்குச் சென்றார். பதரிகாஸ்ரமத்திற்குச் சென்ற க்ருஷ்ணர் மகாதேவனைக் குறித்து தவம் செய்ய ஆரம்பித்தார்.

த்யானத்தில் அவர் சிவனை த்யானம் செய்துகொண்டிருந்தபோது ஒரு பெரிய சப்தம் எழுந்தது. என்ன சப்தம் என்று அவர் பார்த்தார். பெரிய பிசாசு கூட்டம் அவர்முன் வந்து'' இதோ இவரே ஹரி, விஷ்ணு, மாதவர், க்ருஷணர் உங்களுக்கு நமஸ்காரங்கள்'' என்று கூறின. அக்கூட்டத்தில் இரண்டு பிசாசுகள் அவரிடம் வந்தன. இரண்டுக்கும் நீல நாக்கு விகாரமான மூஞ்சி, கோரஸ்வரூபம். இரண்டும் க்ருஷ்ணரை துதித்தன. ''துக்கமூலமான ஸம்ஸாரத்திற்கு இவரே விடிவு. பவரோகத்திற்கு சங்கசக்ரதாரியான இவரே மருந்து.

ஆதிதேவன் இவரே, புராணபுருஷனும் இவரே, ஆத்மஸ்வரூபமும் இவரே''என்று சொல்லிக்கொண்டு அவரிடம் வந்தன. நீங்கள் யார்? எதற்கு இங்கு வந்துள்ளீர்கள் என்று கேட்டன. நான் யதுகுலத்தில் வந்த க்ருஷ்ணன், கைலாசபதியான சிவனை தர்சிக்க வந்துள்ளேன்'' நீங்கள் யார்? என்று வினவினார். அதில் மிகவும் கோரரூபமான பிசாசு'' நான் தான் கண்டாகர்ணன் எனும் க்யாதிபெற்ற பிசாசு, ருத்ரனின் நண்பனான குபேரனுக்கு எடுபிடி, பிசாசு ரூபத்திற்குமுன் பாபத்தினால் விஷ்ணுசப்தமே காதில் விழக்கூடாது என்று இரு காதுகளிலும் மணிகளைத் தொங்கவிட்டு அந்த சப்தம் விழாதவாறு பார்த்துக் கொண்டேன். மோக்ஷத்திற்காக சிவனையே ஆராதித்து வந்த எனக்கு சிவன் மோக்ஷத்தைத் தருபவன் விஷ்ணு, பத்ரிகாஸ்ரமம் சென்று அவரை ஆராதனம் செய், த்வேஷத்தை விடு என்றார். இப்படி கூறிய பிசாசு அங்கேயே விஷ்ணுவைத் துதிக்க ஆரம்பித்தது.

'நமோ பகவதே தஸ்மை வாஸுதேவாய சக்ரிணே
நமஸ்தே கதினே துப்யம் வாஸுதேவாய தீமஹி ॥

ஓம் நாராயணாய விஷ்ணவே ப்ரபவிஷ்ணவே
மம பூயான்மன:ஸுத்தி: கீர்த்தனாத் தவ கேசவ ॥

ஜன்மேதத்தீத்ருசம் கோரம் மாபூயான் மம துராஸதம்
தேவதூதோ பவிஷ்யாமி ஸ்மரணாத் தவ கோபதே ॥

தவ சக்ரப்ரஹாரேண காயோ நஸ்யது மாமக
மம பூயோ பவோ மா பூதேஷா மே ப்ரார்தனா விபோ ॥

மனஸ்தத்ரக்ஷதாம் தேவ பூயோ பூயோ ஜனர்தன
மா பூன்மனஸி காலுஷ்யம் மனோ மே நிர்மலம் பவேத் ॥

இப்படி சொல்லிகொண்டே பிசாசு ஸமாதியில் ஆழ்ந்தது. க்ருஷ்ணரும் தன் விஷ்ணு ரூபத்தை அதற்குக் காட்டினார். அதன் பாபங்கள் எல்லாம் தொலைந்தன. அவரும் கண்டாகர்ணனைத் தொட்டு ஆசீர்வதித்தவுடன் சுந்தரரூபமாக ஆனான். ''இந்த்ரன் ஸ்வர்க லோகத்தில் உள்ளவரை அங்கு வசி, அவன் பதவி முடியும்போது என்னைவந்து அடை'' என்றுகூறினார். ஹரிக்கும் ஹரனுக்கும் எந்த பேதமுமில்லை என்று மானவர்கள் அறியவேண்டும் என்றார். மேலும் அவர் சிவனைத் துதித்தார்.

நமஸ்துஷ்டாய துண்டாய னமஸ்துடிதுடிதாய ச
நமச்சிவாய சாந்தாய கிரிசாய ச தே நம: ॥

சிவனும் விஷ்ணுவைத்துதித்தார்.

த்வமேவேதம் ஜகத்ஸர்வம் யத்பூதம் பவிஷ்யதி
த்வத்தோ விராட் ப்ராதுரபூத் ஸம்ராட் சைவ ஜனார்தன ॥

அஹம் த்வம் ஸ்வர்கோ தேவ த்வமேவாஹம் ஜனார்தன
ஆவயோரந்தரம் நாஸ்தி சப்தைரர்தைர் ஜகத்பதே ॥

சிவாய விஷ்னுரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு:விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ: ।

இதுதான் கண்டாகர்ணன் கதை. ஹரிஹர அபேதத்தை முக்யமாகச் சொல்லுகிறது.

( ஹரி வம்சம்)

# வேதாந்த ஸாரம்

## ஸாதானந்த யோகி

வேங்கடகணபதி சர்மா

*வாசகர்கள் வேதாந்தம் என்று கேட்டிருப்பார்கள். அது என்ன? என்பது பற்றி பல ஐயங்கள் இருக்கும். பொதுவாகவே ஜீவன், ஜகத் கடவுள் இவைபற்றியும் இம்ம்மூன்றுக்கும் உள்ள தொடர்பு பற்றி பேசுவது தத்வம், ஆங்கிலத்தில் Philosophy என்பர். நம் நாட்டில் பௌத்த, சமண தத்வ இலக்கியங்களைத் தவிர்த்து ஷட்தர்சனங்கள் ப்ரசித்தி பெற்றவை. தர்க்க ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் தத்வம் பற்றி பேசுவது வேதாந்தமாகும். காலப்போக்கில் அத்வைதமே வேதாந்தம் என்றாகிவிட்டது. அதுபற்றி பேசப்பட்ட, எழுதப்பட்ட நூல்கள் ஏராளம். அவைகளில் பாலபாடமாக எல்லாராலும் ஆரம்பிக்கப்படுவது வேதாந்த ஸாரம் எனும் இந்த நூல். இதை எழுதியவர் ஸதானந்த யோகி. சாங்கர மதத்தை சாரமாக, அவருடைய நூல்களிலிருந்தே எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.*

*இதற்கு சுபோதினி, பாலபோதினி, விதவன்மனோரஞ்சனி என்று வ்யாக்யானங்கள் உண்டு. ஸ்ரீஹிரியண்ணா மிகச்சிறந்த ஆங்கில விளக்கவுரையை எழுதியுள்ளார். நூலின் அமைப்பு ஆறு அத்யாயங்களைக் கொண்டது. 1 பூர்வாங்கம் 2அத்யாசம் 3 ஜீவனும் அத்யாஸமும் 4 அத்யாஸம் நீக்கல் 5 ஆன்ம உணர்வுக்குப் படிகள் 6 ஜீவன்முக்தன் கொஞ்சம் கடினமாயினும் வாசகர்கள் மீண்டும் மீண்டும் இதைப் படிக்கக் கேட்டுகொள்கிறேன். எளிய தமிழுரையில் தருவதற்கு எல்ல முயற்சிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலே படிக்கவும்.*

### பூர்வாங்க முன்னுரை

*அகண்டம் சச்சிதானந்தமவாங்மனஸகோசரம்*
*ஆத்மானம் அகில ஆதாரமாஸ்ரயே அபீஷ்ட ஸித்தயே 1*

*என அபீஷ்டம் நிறைவேற அகண்டமாயும், சச்சிதாந்தமாயும், வாக்குக்குக்கும் மனதிற்கும் எட்டாததும், எல்லவாற்றிற்கும் ஆதாரமான ஆத்மனை அண்டுகிறேன்.*

*அர்ததோஅப்யத்வயானந்தானதீததவைதபாவ:*
*குரூனாராத்ய வேதாந்தஸாரம் வக்ஷ்யே யதாமதி 2*

அத்வயானன்தர் எனும் பெயரைக் கொண்டவரும் பேதங்களைத் துறந்தவருமான குருவை வணங்கி வேதாந்த ஸாரம் எனும் நூலை என் புத்திக்குட்பட்டவாறு சொல்கிறேன்.

## வேதாந்த விஷயம்

*வேதாந்தோ நாம உபனிஷத்ப்ரமாணம் தது பகாரிணீ*
*சாரீரக ஸூத்ராதினி ச 3*

வேதாந்தம் என்பது ப்ரம்மஸூத்ரமும் உபனிஷத்கள் மற்றும் சில நூல்கள் (கீதை போன்றவை) சொன்ன ப்ரமாணங்கள்.

*அஸ்ய வேதாந்த ப்ரகரணத்வாத் ததீயை:ஏவ அனுபந்தை தத்வத்தா*
*அஸித்தே: ந தே ப்ருதக் ஆலோசனீயா: 4*

இது ஒரு ப்ரகரண நூலாகையால் சில அனுபந்தங்கள் பற்றித் தனியாகச் சொல்ல வேண்டியது இல்லை.

*நனு அனுபந்தோ நாம அதிகாரிவிஷயஸம்பந்த ப்ரயோஜனானிநச 5*


முதல் கேள்வியே இந்நூலை யார் படிக்கலாம் அதாவது அதிகாரி யார்? என்பது. . படிப்பதற்கு தகுதி உள்ளவர்கள்தான இதைப் படிக்காலாம் என்பது தாத்பர்யம்.


।। ஸ்ரீ: ।।
இனி பழைய புத்தகங்களை மீண்டும் Type செய்ய தேவையில்லை.
பழைய புத்தகங்கள் 20, 30, 50, 70 வருட புத்தகங்களை
Typeing செய்யாமலே பிழைகளை திருத்தி புதிய வடிவில் (New font) மாற்றி
எல்லா மொழிகளிலும் (All Languages) அச்சிட்டு தரப்படும்.
க்ரந்தம், தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம்
எல்லா மொழிகளிலும் டைப் செய்து அச்சிட்டு தரப்படும்.
(Transliteration in all Languages done here.)
Grantham to Devanagiri, Grantham to Tamil,
மற்றும் வேத ப்ரமாண புத்தகங்கள் உபநிஷத்துக்கள்
உதாத்தம், அநுதாத்தம் இவற்றுடன்
அச்சிட்டு தரப்படும்.
Contact : V.K.N. Enterprises (Printer)
Mylapore, Chenani-600 004, Phone : 98402 17036, e:mail : vknprinter@gmail.com

# ஸபா ரஞ்ஜனசதகம்

*நீலகண்ட தீக்ஷிதர்*

## தைவம் அல்லது விதி



**கிம் ஸாஸ்த்ரைர்பஹுதாப்யஸ்தை; கிம் சாதுர்யேண கிம் தியா**
**கிம் சௌர்யேணானிவார்யேண லலாடே சேன்ண லிக்யதே ॥ 57**

*சாஸ்த்ரம் பல படிப்பது சாதுர்யமாயிருப்பது, புத்திமானாக இருப்பது வீரதீரனாக இருப்பது இவை எதுவும் தலையில் எழுதியிருந்தால் தான் நடக்கும்.*

**கடமானா: குடும்பேஷு தரித்ரதி விபச்சித:**
**மூடேஷு ரமதே ல்க்ஷ்மீரஹோ திஷ்டஸ்ய சேஷ்டிதம் ॥ 58**

*விதியின் வலிமையைப்பாருங்கள். புத்திசாலிக்கு வறுமையைக் கொடுக்கிறது, மூடனுக்கு தனவர்ஷம் செய்கிறது.*

**துல்யம் கர்ஷந்தி ப்ருத்வீம் துல்யம் ஸாஸ்த்ராண்யதீதே**
**உன்மஜ்ஜந்தி நிமஜ்ஜந்தி தைவஸ்யைகஸ்ய சேஷ்டதா ॥ 59**

சிலர் நன்றாக உழுகிறார்கள், சிலர் நன்றாகப் படிக்கின்றனர். விதியின் விளையாட்டு சிலர் புகழ் பெறுகிறார்கள், சிலர் கீழே வீழ்கின்றனர்.

**லுப்யந்தி விதரந்தோபி குப்யந்தி ஸரளா அபி**
**முஹ்யந்தி மதிமந்தோபி போக்துர்பாக்யவிபர்யாத ॥ 60**

*கொடையாளி கருமியாகிறான், நல்லிதயம் கொண்டவன் குரூரமாகிறான், படித்தவன் மூடனாகிறான் யாருக்கு? அதிர்ஷ்டமில்லா யாசகனுக்கு. (விதியின் விளையாட்டு)*

**ஆதீயதே விஜானந்தி விரஜன்தி முஹுர்முஹு:**
**நாத்யந்தாய நிவர்தந்தே நரா வைஷமஸ்ய விதே: ॥ 61**

*மனிதர்கள் படிக்கிறார்கள், த்த்வத்தை சிந்திக்கிறார்கள். முக்தி எல்லாருக்குமா கிடைக்கிறது? விதியின் விஷமத்தனம் இதுதான்.*

**தோஹதைராலவாலைச்ச கியத்வ்ருக்ஷானுபாஸ்மஹே**
**தே து காலம் ப்ரதீக்ஷந்தே பலபுஷ்பஸமாகமே ॥ 62**

பயிர்களை வளர்க்க எவ்வளவோ பாடுபடுகிறார்கள். அவைகளோ துளிர்விடவும் பழம் கொடுக்கவும் காலத்தை எதிர்பார்க்கின்றன.

**க; ப்ரஸூதே புரோவாதம் க: ப்ரேரயதி வாரிதம்**
**ப்ராப்தே து ஸ்ராவணே மாஸி பவத்யேகார்ணவம் ஜகத் ॥ 63**

*கொண்டல் காற்றை யார் ஏவுகிறார்?மழை மேகத்தை யார் அனுப்புகிறார்?ஆவணி மாதம் வரட்டும், ஜகத் முழுவதும் வெள்ளக் காடாகிறது. (காலமே காரணம் என்று பொருள்)*

**கால: கரோதி கார்யாணி கால ஏவ விஹந்தி ச**
**கரோமீதி விஹன்மீதி மூர்கோ முஹ்யந்தி கேவலம் ॥ 64**

*காலம்தான் படைக்கிறது, அழிக்கிறது. மூர்கனோ தானே எல்லாவற்றையும் செய்வதாக நினைக்கிறான்.*

**அபி காலஸ்ய ய; கால: ஸோபி காலமபேக்ஷதே**
**கர்தும் ஜகந்தி ஹர்தும் வா காலஸ்தேன ஜகத்ப்ரபு: ॥ 65**

*காலத்தையும் அடக்கியாள்பவன் காலன். இவனும் காலத்தை எதிர்பார்த்துதான் நடக்கிறான். எனவே காலனுக்கும் மேலாக உள்ளது காலமே.*

**கால: ஸதாகதிரபி ஸ்தாயீவ பரிசேஷ்டதே**
**சண்டமாருதவத் விஸ்வமத்ரோத்தரயத்க்ஷணாத் ॥ 66**

*காலம் மாறிக்கொண்டேயிருப்பினும் ஒரே நிலையாய் இருப்பதுபோல் இருக்கும். ஒருக்ஷணம்தான்.சண்டமாருதமாய் மேலும் கீழுமாய் புரட்டிப்போட்டுவிடும்.*

*(வளரும்)*

# பாராயண பக்கம்

மன்னிய திருவண்ணாமலையே போற்றி
என்னையுமொருவனாக்கி யிருங்கழல்
சென்னியில் வைத்த சேவகபோற்றி
தொழுத கை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவு இலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மான் நேர் நோக்கி மனாளாபோற்றி
வான் அகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடைமூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்தே அமுதே போற்றி (திருவாசகம்)

பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில் பொருள் இன்பம் என இரண்டும்
இறுத்தேன் ஐம்புலங்கள் கடன் ஆயின வாயில் ஒட்டி
அறுத்தேன் ஆர்வம் செற்றம் அவை தம்மை மனத்து அகற்றி
வெறுத்தேன் நின் அடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே

மறந்தேன் உன்னை முன்னம் மறந்த மதி இல் மனத்தால்
இறந்தேன் எத்தனையும் அதனால் இடும்பைக் குழியில்
பிறந்தே எய்து ஒழிந்தேன் பெருமான் திருமார்பா
சிறந்தேன் நின் அடிக்கே திருவிண்ணகர் மேயவனே.

மான் ஏய் நோக்கியர் தம் வயிற்றுக்குழியில் உழைக்கும்
ஊன் ஏய் ஆக்கை தன்னை உதவாமை உணர்ந்து உணர்ந்து
வானே மா நிலமே வந்து வந்து என் மந்த்து இருந்து
தேனே நின் அடைந்தேன் திருவின்னகர் மேயவனே.

(திருமங்கை ஆழ்வார்)

# பாராயண ஸ்லோகங்கள்

நக்ஷத்ர க்ரஹ தாராணாம் அதிபோ விஸ்வபாவன:
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதசாத்மன் நமோஸ்து தே ॥

நம;பூர்வாய கிரயே பச்சிமாத்ரயே நம:
ஜ்யோதிர்கணானாம் பதயே தினாதிபதயே நம: ॥

ஜயாய ஜயபத்ராய ஹர்யஸ்வாய நமோ நம:
நமோ நம: ஸஹஸ்ராம்சோ ஆதித்யாய நமோ நம: ॥

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:
நம;பத்மப்ரபோதாய மார்தாண்டாய நமோ நம: ॥

ப்ரம்மேசானாஸ்யுதேசாய ஸூர்யாதித்ய வர்சஸே
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம: ॥

தமோக்னாய ஹிமக்னாய சத்ருக்னாய அமிதாத்மனே
க்ருத்க்னக்னாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: ॥
தப்தசாமீகராபாய வஹ்னயே விஸ்வகர்மணே
நமஸ்தமோபிக்னாய ருசயே லோகஸாக்ஷிணே ॥ (ஆதித்ய ஹ்ருதயம்)

# தர்ம சாஸ்தா ஸ்தவம்

(நந்தவனத்தில் ஓராண்டி எனும் மெட்டு)

த்ராதாரம் ஆபத்ஸு நித்யம் பக்த வ்ருந்தாய ஸர்வம் ப்ரதாதாரமிஷ்டம்
வக்தாரமேகாந்த பக்தே: சத்ரு ஹந்தாரம் அஸ்மத்குலஸ்யாதி தைவம் 1

நித்யம் கஜாரூடகாத்ரம் லோகவிக்யாதமாங்கல்ய சுத்தஸ்வகோத்ரம்
பக்தாவனாயாத்தவேத்ரம் சாருனேத்ரம் சரச்சந்த்ர ஸன்மித்ர வக்த்ரம் 2

பாலோசிதாகல்பவேஷாம் ஸமதாசேஷ பாஷண்ட ஷண்டோத்ததோஷம்
ஸங்கல்ப ஸத்பக்தபோஷம் வேதகோஷாபிஷேகே ஸுதோஷம் ஜுஷந்தம் ॥ 3

ஸ்ரீ த்ர்யம்பாக்யே புராக்ர்யே க்ஷேத்ரமத்யே வஸந்தம் சரந்தம் ச லோகே
கச்சன்தமாபத்ஸு பக்தான் பக்தசித்த ப்ரவேசேன ஸர்வம் வதந்தம் 4

மீனோத்ஸவே பேசலலங்கம் வீவதக்ஷீர ஸம்ஸக்தி திவ்யோத்தமாங்கம்
காருண்ய நிஷ்யந்த்யபாங்கம் ஆஹிதாக்னி த்விஜைர்மந்த்ர ஸம்பூஜிதாங்க்ரிம் ॥ 5

சாஸ்தாரமீடே பவித்ரம் பால சாஸ்தாரமிஷ்டம் ஹரீசான புத்ரம்
சாஸ்தாரமீடே பவித்ரம். இதை ஒவ்வொரு ஸ்லோகத்திற்குப் பின் சொல்லவும்

# த்ரிபுரஸுந்தரீ வேத பாதஸ்தவம்



**சரணம் கரவாண்யம்ப சரணம் தவ ஸுந்தரீ**
**சபே த்வத்பாதுகாப்யாம் மே நான்ய: பந்தா அயனாய ॥ 56**

*தாயே ஸுந்தரீ உன் சரணத்தைப் புகலடைகிறேன், உன் பாதுகைகள் மீது ஸத்யம் செய்கிறேன். முக்திக்கு வேறு வழி இல்லை.*

**ரத்னசத்ரைர் சாமரைர் தர்பணாத்யை:ஸக்ரோசானீம் ஸர்வதோ பாசரந்த்ய:**
**யோகின்யோன்யா:ஸக்தயச்சாணிமாத்யா யூயம் பாத ஸ்வஸ்திபி: ஸதா ந: 57**

*ரத்னம் குடை சாமரம் கண்ணாடி முதலியவைகளால் சதா ஸ்ரீதேவியை உபசரித்துக் கொண்டிருக்கும் அணிமாதி தேவதைகளே எங்களை எப்போதும் க்ஷேமமாக இருக்க அருளுங்கள்.*

**தரித்ரம் மாம் விஜானீஹி ஸர்வஜ்ஞ்யாஸி யத: சிவே**
**தூரிக்ருத்யாசு துரிதமனா நோவர்தயா ரயிம் ॥ 58**

*சிவே நீ எல்லாம் அறிந்தவள், ஆதலால் தரித்ரன் என்னை அறிவீர். எனவே என் பாபத்தை விலக்கிச் செல்வத்தை வ்ருத்தி செய்.*

**மஹேஸ்வரீ மஹாமந்த்ர கூடத்ரயகளே பரே**
**காதிவித்யாக்ஷரச்ஸ்ரேணி முசந்தஸ்த்வா ஹவாமஹே ॥ 59**

*மஹேஸ்வரீ மஹாமந்த்ரமெனும் பன்சதசாக்ஷரீயில் உள்ள மூன்று வடிவமுள்ள ரூபிணீ மேற்சொன்ன காதிவித்யையிலுள்ள அக்ஷர வரிசையை விரும்பவராய் உன்னை அழைக்கிறோம்.*

**மூலாதாரா தூர்த்வ மத்தசரந்தீம் பித்வா க்ரந்தீன் மூர்த்னி நிர்யத் ஸுதார்த்ராம்**
**பஸ்யந்தஸ்த்வாம் யே ச த்ருப்திம் லபந்தே தேஷாம் சாந்தி**
**சாஸ்வதீ நேதரேஷாம் ॥ 60**

*மூலாதாரத்துக்கு மேல் உள்ளே சன்சரிப்பவளும் க்ரந்திகளைப் பிளந்து சிரஸை அடைந்து ஸஹஸ்ராரத்தில் அமுதத்தால் நனைந்தவளுமான உன்னைப் பார்த்து யார் த்ருப்தி அடைகிறார்களோ அவர்களுக்குத்தான் சாஸ்வதமான சாந்தி உண்டு, மற்றவர்களுக்கு இல்லை.*

# பித்ரார்ஜிதம்

*அல்பஸ்ருதன்*

கடந்த இதழ்களில் மகாபாரதத்தின் பெருமைகளைப் பார்த்தோம். இப்போது அதன் உரை ஆசிரியர்களைப்பற்றிப் பார்ப்போம். வடமொழியில் 22 உரை ஆசிரியர்கள் இதற்கு உரை செய்துள்ளனர். அனந்தபட்டர், அர்ஜுனமிஸ்ரர், ஆனந்தர், நீலகண்டர் ராமகிங்கரர் தேவபோதர், விமலபோதர் போன்றவர்கள் முக்யமானவர்கள்.

தேவபோதரின் ஞ்யானதீபிகையும் விமலபோதரின் விஷமஸ்லோக டீகையும் நீலகண்டரின் பாரதபாவ தீபிகையும் முக்யமானவை. நீலகண்டரின் வ்யாக்யானமே இப்போதும் ப்ரபலமாயுள்ளது. அகஸ்த்யபட்டர் பாரதக்கதையைச் சுருக்கி பாலபாரதம் எனும் நூலை யாத்தார். அதுவே வில்லிபாரதத்திற்கு அடிப்படையானது.

சமண பௌத்தர்கள் தம் மதத்தைப் பரப்ப ராமாயணத்தையும் பாரதத்தையும் இஷ்டப்படித் திரித்து எழுதினர். நல்லகாலம் பின்பு வந்த வைதிகசமயத்தாக்கம் அவைகளை அடித்துகொண்டு போய்விட்டது. கடைச்சங்க புலவரான பெருந்தேவனார் தமிழில் முதலில் பாரதம் எழுதினார். துரதிர்ஷ்டவசமாக நமக்கு முழுவதும் கிடைக்கவில்லை. சிற்சில பாக்களேக் கிடைக்கின்றன.

ஆயிரம் வருஷ இலக்கியம் சங்க காலத்து பெருந்தேவனாருக்குப்பிறகு தொண்டை மண்டலத்தில் இன்னொரு பெருந்தேவனார் பாரதத்தை 12000 பாடல்களாகப்பாடினார். இது வெண்பாக்களாலானது. பாட்டும் வசனமும் கலந்த பாட்டுடைச்செய்யுள்ளாக உள்ளது இன்னூல். வசனம் மணிப்ரவாளமாக உள்ளது. இதற்கு 400 ஆண்டுகள் கழித்து வில்லிபுத்தூரார் பாரதத்தை விருத்தப்பாக்களால் யாத்தார். அவர் காலத்துக்குப்பிறகு நல்லாப்பிள்ளை என்பவர் வில்லிபாரதத்தை விரித்துப் பாடினார். ஒரு நூற்றாண்டுகள் கழித்து அரங்கனாதக் கவிராயர் வில்லிபாரதத்தில் காணப்பெறாத கதை களை விரித்துப்பாடினார். 18 பருவங்களையும் விரித்து வில்லிபுத்தூரார் பாடல்களையும் உள்ளடக்கி பாடினவர் நல்லாப்பிள்ளை.

இப்போது க்ராமங்களில் பாரதம் படிப்பது இவருடைய பாரதமே. இப்படி பாரதம் தமிழில் பாடிமுடிக்க 1400 வருடங்கள் ஆயின. ராஜாஜியின் மகபாரதம் ப்ரஸித்திப்பெற்றது. தமிழ்ப் பண்டிதரானராமானுஜாசார்யாரின் பெருமுயற்சியால் 18 பருவங்களும் வசனரூபமாக செய்யப்பட்டது. இதற்கு 20 வருடங்கள் ஆயின.

மற்ற மொழிகளில் பாரதம். ஆந்த்ர பாரதம் 12ஆம் நூற்றாண்டில் நன்னய பட்டர் என்பவரால் பத்யகாவ்யமாக செய்யப்பட்டது. அவர் வ்யாச பாரதத்தின் மூன்று பர்வங்களை மட்டும் மொழிபெயர்த்தார். இவரை ஆந்த்ர வ்யாசர் என்றும் ஆந்த்ர வாக் அனுசாசனர் என்றும் போற்றினர். திக்கன எனும் ஒரு கவி விராடபர்வம் முதல் ஸ்வர்கா ரோஹணபர்வம் முடிய தெலுங்கில் எழுதினார். இவரை கவிப்ரம்மா என்று புகழ்வர். நன்னய பட்டர் விட்டதிலிருந்து தொடங்கி முழுவதுமாக எர்ரனபட்டர் பாடினார். இவர் பாடிய செய்யுள்கள் குறைவே ஆனாலும் அதில் வரும் மார்கண்டேய சரித்ரம், தர்ம வ்யாத வ்ருத்தாந்தம், துர்யோதனன் கோஷயாத்ராமுதலியவை கவி நயம் வாய்ந்தவை. அதனால் இவருக்கு ''ப்ரபந்த பரமேஸ்வரர்'' எனும் அடைமொழி வழங்கலாயிற்று. மேலே கூறிய கவிகள் மூவரையும் ''கவித்ரயம்'' என்பர். ஆந்த்ர பாரதம் இப்படி50000 பாடல்கள் கொண்டதாயிற்று. இலக்கையச்சுவைக்கு இவைகளுக்கு இணையில்லை.

மற்ற மொழிகளில் பாரதம் 15ஆம் நூற்றாண்டில் வங்காளத்தில் காசிராமதாஸ் என்பவர் வங்காலத்தில் பாட்டாகப்பாடினார். இதை வைத்துக்கொண்டு தான் அக்பர் பாரசீகபாஷையில் பாரதத்தை மொழிபெயர்த்தார் என்பர். சரளாதாசர் ஒரியமொழியிலும் அஸ்ஸாமில் ராமஸரஸ்வதி என்பவராலும் பாடப்பட்டது. மலையாளத்தில் துஞ்சத்து எழுத்தச்சன் பாட குஜராத்தில் ரீவா சங்கர் என்பவர் பரததைப்பாடினார்கள். நம் நாட்டில் வழங்கி வரும் எல்லா மொழிகளிலும் பாரதம் பாடப்பட்டது. இலக்கியமே இல்லாத மொழிகளிலும் கூட பாரதம் பாட்டுவடிவங்களில் மக்கள் வாயில் வழங்கி வருகிறது. இதுவே இதன் பெருமை.

பாரசீக பாஷையில் நம் நாட்டுமொழிகளில் மட்டுமல்லாமல் அன்னியமொழிகளிலும் பாரதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அக்பர் இதன் பெருமையைக் கேட்டு தன் புலவர்களை விட்டு படிக்கச்சொல்லி அபு பெய்சல் என்பவரை மொழிபெயர்க்கச் சொன்னாராம் அவர் எழுதிய அயினிஅக்பர் எனும் நூலில் இதற்கான செலவு 20லட்சம் மெகாரா என்று குறிப்பிடுகிறார். இது இப்போது ஜைய்பூரில் பொட்டிகன்னா எனும். நூல் நிலையத்தில் உளளது.

(வளரும்)

# மகாபாரத சுருக்கம்

## ஆதிபர்வம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

**ததோ ராஜானமாமந்த்ர்ய விதுரானுமதோபி ஹி**
**பாரத்வாஜோ மஹாப்ராஞ்யோ மாபாயமாஸ மேதினீம் ॥ 111**

*அரசனிடமிருந்தும் விஹுரனிடமிருந்தும் அனுமதி பெற்ற பிறகு த்ரோணர் களம் அமைத்தார்.*

**அவகுஷ்டம் புரஞ்சாபி ததர்தம் (பரதர்ஷப)**
**ப்ரேக்ஷாகாரம் ஸுவிஹிதம் சக்ருஸ்தே தஸ்ய சில்பினந 112**

*ஊருக்குத் தெரிவித்தபின் அனைவரும் பார்ப்பதற்கு ஏற்ப அரங்கம் நிர்மாணிக்கப்பட்டது.*

**தஸ்மிந்ததோஹனி ப்ராப்தே ராஜா ஸசிவஸ்ததா**
**சாதகும்பமயம் திவ்யம் ப்ரேக்ஷாகாரமுபாகமத் ॥ 113**

*உரிய நாள் வந்தவுடன் அமைச்சர்களுடன் ராஜா தங்கத்தை நிகர்த்த அரங்கத்தை அடைந்தான்*

**ஸ்த்ரியச்ச ராஞ்ச்யஸ்சர்வாஸ்தாஸ்ஸப்ரேஷ்யாஸ்ஸபரிச்சதா:**
**ஹர்ஷாத் ஆருருஹுர்மன்சாத் மேரும் தேவஸ்த்ரியோ யதா 114**

*பெண்களும் புருஷர்களும் தேவகன்னிகள் மேருமலையை எப்படி ஏறுவாரோ அப்படி உவகையுடன் அரங்கம் ஏகினார்கள்.*

**ப்ரவாதிதைச்ச வாதித்ரைர்ஜனகௌதூஹலேன**
**மஹார்ணவ இவ க்ஷுப்தஸ்ஸமாஜஸ்ஸோ அப்வத் ததா ॥ 116**

*வாத்யமுழக்கமும், மக்களின் சப்தமும் அரங்கத்தை கடல்போல் அல்லோலகலப்படச் செய்தது.*

**ததச்சுக்லாம்பரதர: சுக்லயஞ்யோபவீதவான்**
**ரங்கமத்யம் ததாசார்யஸ்ஸபுத்ர: ப்ரவிவேச ஹ ।। 117**

*வெண்ணாடை பூண்டும் வெண் முப்புரி நூல் அணிந்தும் ஆசார்யன் தன் பிள்ளையுடன் அரங்கத்தில் நுழைந்தார்.*

**ததோ பத்தாங்குலித்ராணா விவிசுர்பரதர்ஷபா:**
**சக்ரு; பூஜாம் யதான்யாயம் த்ரோணஸ்ய ச க்ருபஸ்ய ச ।। 118**

*பரதகுலச்செம்மல்கள் கைக்காப்புகள் பூண்டு அரங்கத்தில் நுழைந்தனர், த்ரோணருக்கும் க்ருபருக்கும் பூஜை செய்தனர்.*

**த்ரோணேன ஸமுஞ்யாதா க்ருஹ்ய சாஸ்த்ரம் பரந்தபா:**
**ஜ்யாகோஷம் தலகோஷம் ச க்ருத்வா பூதான்யமோஹயன் ।। 119**

*த்ரோணரினால் அனுமதிக்கப்பட்டபின் அவ்வீரர்கள் நாண் ஒலியையும் கர ஒலியையும் செய்து எல்லாரையும் மயக்கினார்கள்.*

**அனுஜ்யேஷ்டம் ச தே தத்ர யுதிஷ்டிரபுரோகமா:**
**சக்ருரஸ்த்ரம் மஹாவீர்யா:குமாரா: பரமாத்புதம் ।। 120**

*யுதிஷ்டிரரை முதன்மையாகக் கொண்டு வயதின் படி வீரர்கள் அத்புதமான வீரதீரச் செயல்களைச் செய்தனர்.*

**லாகவம் ஸௌஷ்டவம் சோபாம் ஸ்திரத்வம் த்ருடமுஷ்டிதாம்**
**தத்ருசுஸ்தத்ர ஸர்வேஷாம் ப்ரயோகம் கட்கசர்மணோ: ।। 121**

*லாகவமாகவும் சோபையாகவும் ஸ்திரமாகவும் அவ்வீரர்கள் செய்த ஆயுதப் ப்ரயோகங்களை எல்லாரும் கண்டனர்.*

**அத தௌ நித்யஸம்ஸ்ருஷ்டௌ ஸுயொதன வ்ருகோதரௌ**
**அவதீர்ணௌ கதாஹஸ்தவேகஸ்ருங்காவிவாசலௌ**
**சேரதுர்மண்டலகதௌ ஸமதாவிவ குஞ்சரௌ ।। 122**

*நித்ய வைரிகளான பீமனும் துர்யோதனனும் பின்பு தங்கள் ஆயுதங்களைச் சுழற்றி இரு நகரும் மலைகள்போல் மண்டலகதியாய் போரிட்டனர்.*

**குருராஜே ஹி ரங்கஸ்தே பீமே ச பலினாம் வரே**
**பக்ஷபாதக்ருதச்ஸ்னேஹஸ்ய த்விதேவாபவத் ஜன: ।। 123**

*அந்த இருவரும் அரங்கத்தில் சண்டைசெய்த்போது ஜனங்கள் இரு கக்ஷிகளாக விளங்கினர்.*

(தொடரும்)

உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# பாப புண்யங்கள்

நாம் வயிறு நிறையச் சாப்பிட்டுக்கொண்டு, குழந்தைகள், பந்துக்கள் முதலியவர்கள் கஷ்டப்படாமல் சாப்பிடும்படி செயது வருவதற்காக க்ரஹஸ்த தர்மத்தில் சில காரியங்கள் செய்து கொண்டு இருக்கிறோம். நம்முடைய சரீரத்தை மூட வஸ்த்ரமும், பசியைப் போக்க ஆகாரமும், இருப்பதற்கு வீடும், நம்முடைய குழந்தை முதலியவர்களைப் போஷிப்பதற்குரிய ஸௌகரியங்களும் அமைவதற்காக ஒரு லௌகிக காரியம் செய்வதைப் போல, எந்த லோகத்திற்குப் போனாலும் அங்கு ஸௌக்யமாயிருக்க ஒரு காரியம் செய்யவேண்டும். அந்தக் காரியம் தான் தர்மம்.

ஒரு சந்தேகம் இப்பொழுது ஏற்படுகிறது. வயிற்றுப்பாட்டுக் காரியத்திலேயே காலமெல்லாம் சரியாயப் போகிறதே; தர்மம் செய்ய நேரம் இல்லையே; இந்த மாதிரி ஒரு சிரமம் தோன்றுகிறது. இப்படிச் சொல்லுகிறவர்களெல்லாம் பணம் ஸம்பாதிக்கத் தங்கள் காலத்தையெல்லாம் செலவழித்தாலும் பாதகமில்லை. வீண் பேச்சிலும், நினைவிலும், பரிஹாஸத்திலும், உத்ஸாஹத்திலும் எவ்வளவோ காலம் வீணாகப் போகிறது. மூணம் ஸம்பாதிக்கும் காலத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்து, மிச்சமுள்ள காலத்தை வீணாகச் செலவழிக்காமல், ஆத்ம லாபமான காரியத்தைச் செய்யலாம். முனம் இருந்தால் அவகாசம் கிடைக்காமற் போகாது. ட்ராமிலும், மோட்டாரிலும், பஸ், ரயியிலும் போகும்போது பகவந்நாமாவை ஜபித்துக்கொண்டே செல்லலாம். இப்போது ஸம்பாதிக்கும பணத்தில் ஒரு சிறு தொகையை நாம் இந்த உடம்பை விட்டபிறகு வேறு லோகத்தில் ப்ரயோஜனப்படுமோ? அந்த லோகங்களிற் செலாவணியாகும் பணம் பகவந்நாமா தான். ஆகையால் அதைத் தவறாமல் ஜபிக்க வேண்டும். அவகாசமில்லை என்பது பொய்.

நாம் நான்கு விதத்தில் தர்மம் செய்து வரலாம்; சரீரத்தாலும், வாயாலும், மனத்தாலும், பணத்தாலும் செய்யலாம். பணத்தை ஆத்மலாபத்தில் உபயோகிக்கலாம்; தான தர்மம் செய்யலாம். தரித்திர தசையில் தானதர்மம் எப்படிச் செய்கிறதென்ற ஒரு ஸந்தேகம் தோன்றுகிறது. தரித்திரத்திலும செலவைக் குறைத்து, ஒரு ரூபாயாவது தர்மம் செய்யலாம்; தினமும ஒவ்வொருவரும் ஒரு ரூபாயாவது தர்மம் செய்ய ஸங்கல்பம் செய்து கொள்ளவேண்டும்.

தூங்குவதிலும், வம்பு பேசுவதிலும், ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ கால செலுவழிகிறது. ஆவற்றை நிறுத்திப் பகவானின் சரங்களை த்யானம் செய்யலாம். அதுதான் வரவு; மற்றவை

எல்லாம் செலவுதான். அவையெல்லாம் மாம்ஸத்திற்காகச் செலவழிக்கும் காலம். உடம்பும் மாம்ஸம் தானே; அது ஸம்பந்தமாக செலவழிப்பது மாம்ஸத்திற்காகச் செலவழிப்பது தானே.

மிகவும் பாபம் பண்ணியிருக்கிறோமென்று பயப்படக்கூடாது. நம்மைப்போல் இருந்தவர்கள் பக்தர்களாகி நல்ல கதி அடைந்திருக்கிறார்கள். நம்மைவிட மகா பாபிகளானவர்கள கூட நல்ல ஸ்திதிக்கு வந்திருக்கிறார்கள். பாபிகளை ரக்ஷிப்பதனால்தான் ஈச்வரனுக்குப் பெருமை ஏற்படுகிறது. அதனால் நாம் தைர்யமாக நம்பி நல்ல காரியங்களைச் செய்து வரவேண்டும்.

பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு சொல்லுகிறார்:-

அபி சேத் அஸி பாபேப்ய:
ஸர்வேப்ய: பாப-க்ருத்-தம:
ஸர்வம் ஜ்ஞான-ப்லவேனைவ
வ்ருஜினம் ஸந்தரிஷ்யஸி (கீதை 4-36)

''லோகத்தில் எல்லா பாபிகளிலும் மகா பாபியாக வைத்துகொண்டாலும் பாபமாகிற ஸமுத்ரத்தை ஞானமென்கிற ஓடத்தினால் நீ தாண்டி விடுவாய்'' என்று சொல்லுகிறார்.

அஹம் த்வாம் ஸர்வ-பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஷுச: (கீதை 18-66)

நாம் பாபம் செய்துவிட்டோம் என்று அழக்கூடாது. ''நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடச் செய்கிறேன்; அதனால் நீ அதைர்யப்படாதே; என்று பகவான் கூறுகிறார்.

நாம் எப்படிப் பாபம் செய்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கலாம். வாயாலும், மனத்தாலும், தேகத்தாலும், பணத்தாலும் நாம் பாபம் செய்கிறோம். மனஸில் கெட்ட நினைவுகளை நினைத்துப் பாபம் செய்கிறோம். தேஹத்தால் கெட்ட காரியங்களைப் பண்ணிப் பாபம் செய்கிறோம். வாயினால் உத்ஸாகமாமகப் புரளி பண்ணிப் பாபம் செய்கிறோம். பணத்தினாற் பலவகையாகப் பாபம் செய்கிறோம். நாம் இந்தப் பாபங்களைப் பண்ணக்கூடாது என்று நினைத்தாலும் அப்படி இருக்கமுடியவில்லை. பிசாசுபோலப் பாபம் பண்ணும் பழக்கம் நம்மைப் பிடித்துக் கொண்டிருக்கிறது; நம்மை விடாமற் சுற்றிக்கொண்டே இருக்கிறது. பல காலமாகப் பாபம் பண்ணியிருக்கிறோம். அதனால் தான் அந்தப்பழக்கம் நம்மை விடவில்லை. அந்தப் பழக்கத்தை நாம் எப்படிப் போக்குவது?

எந்த வழியினால் நாம் பாபம் பண்ணுகிறோமோ, அந்த வழியினால்லேயே நாம் பழக்கத்தை மாற்றவேண்டும். முன்புசொன்ன நான்கு மார்கங்களிலேயே அந்த முயற்சியைச் செய்யவேண்டும். - (தொடரும்)